S. 272

உ

சிவமயம்.

யாகோபு திருவாய்மலர்ந்தருளிய

வகாரக்களங்கென்னும்

வாதவைத்தியம்மூலா

இஃது

மதுரை யானைக்கல்தெரு வித்வான்

மூ. குழந்தைவேலுப் பிள்ளையவர்கள்

ஏட்டுப்பிரதியைவைத்து

மதுரை வித்துவான்

த. குப்புசாமி நாயுடு அவர்களால்

பரிசோதிக்கப்பெற்று,

மதுரை புதுமண்டபம் புத்தகஷாப்

இ. ரா. ம.

குருசாமிக் கோனார்

அவர்களாற்றமது

மதுரை வடக்குமாசிவீதி

ஸ்ரீ ராமச்சந்திர விலாசம் பிரஸில்,

பதிப்பிக்கப் பெற்றது.

இதன் விலை) 1927 (அணா 14

ரிஜிஸ்டர் காபிரைட்



உ

கடவுள் துணை.

யாகோபு திருவாய்மலர்ந்தருளிய

வகாரக் களங்கென்னும்

வாத வைத்தியம் கூ.

தெரிந்திருந்த மூதற்பொருளே யழிவில்லாத
சித்திதரு மணியையான் தெரிந்துமுக்கால்
துறந்தமன தினமுமடி யிணையைப்போற்றித்
தொல்லுலகில் வைத்தியர்கள் பிழைக்கவேண்டி
பிறந்தபல வுயிர்கள்தசல் தீரவேண்டி
பிரியமுடன் பைரசம் விபரமாகக்
கறந்தாவின் பால்போலக் கருணைகூர்ந்தேன்
கருத்தறிந்தோர் மூன்றாற்றைக் கருதுவரே. (1)

கருதியே கர்த்தனைத்தான் துதியேசெய்து
கனமான ரசவாதம் கண்டுதேறி
உறுதியா யுலகத்தோர் சித்தராக
உண்மைடாயெழுநூற்றையெடுத்துச்சொன்னேன்
வருதியாய் பைரச வரிசைதன்னை
வழுத்தினேன் சொச்சமதை யிதிலேசொன்னேன்
பருதிமதி யுலகத்திற் புத்தியுள்ளோர்
பக்குவமாய்க் கண்டுகொள்வார் பாசற்றானே. (2)

கண்டுமே மக்காவின் தேசம்விட்டுக்
கலிமாவுங் கண்டோன் மேற்தேசத்தில்
தொண்டுபட்ட லாயில்லா யில்லல்லாகூ
துணையாகப் பத்தியுடன் வழியேசென்று
பண்டுவரும் முன்கதைகள் பேசிற்றனும்
பதிவாக முகம்மதுவைப் பணிந்துபோற்றி
உண்டுமுனி போர்கள்ரச வாதஞ்சொன்னார்
உற்றுணர்ந்து யாகோபு உரைசெய்தேனே. (3)

உரைசெய்தேன் யானுமந்த வாதம்பார்த்தேன்
உறுதியுதை யுலகத்திற் சொன்னேன்யானும்
கரைகண்டேன் எங்கள்குலந் தேவராச்சு
கற்றுணர்ந்து முகம்மதுவின் மார்க்கத்தேகிச்
குறைவில்லா ரசவாதங் குணமதாகக்
கூர்மையாய்ப் படிகேச ரத்திற்புக்கிப்
புரையான வழிதனிலே யேறியானும்
புக்கினேன் பதவிதனிற் புகுந்திட்டேனே (4)

புகுந்திட்டேன் மக்காவின் தேசந்தன்னிற்
புகலரிய பெரியோர்கள் மெத்தவுண்டு
வகுந்திட்ட வாதங்கள் மிகவுஞ்சொன்னார்
வகையான குளிகைமுதற் கண்டுதேறி
உகுந்திட்ட பதினெட்டுப் படியில்யானும்
உற்றுமே யிராறு படிகளேறிப்
பகுந்திட்டேன் பிறசூலுங் கண்டாரப்போ
பக்குவமாய்க் கைகொடுத்தார் பதவியாமே. (5)

பதவியாய் ஆதிமறை லேதம்நாலும்
பகுத்துணர்ந்து சாஸ்திரமுஞ் சொன்னரப்போ
உதவியாய்ப் பொதிகைதனில் வாழுகின்ற
உறுதிபெற்ற கும்பமுனி யருளேச்சொன்னர்
சதமான தேவரிஷி சித்தர்தம்மைத்
தான்தேடி யவர்களையுங் கண்டுதேறி
முதலான பருதிபதி சுழியைகூடி
மூடிவான சிவனுமையும் பாதிகண்டேன் (6)

கண்டுமே சாஸ்திரங்க ளனந்தமுண்டு
கருவறியா மடையர்மெத்த கனிவில்லாதார்
தொண்டுபட்ட சாஸ்திரங்கள் பாடம்பண்ணித்
தொல்லுலகிற் சொல்லுவா ரறியாமூடர்
பண்டுபழங் கதைசொல்வார் மயங்கிவீழ்வார்
பதிவான நிலைதவறி மாயைபூண்டு
வண்டுபோற் கிதங்கள் பாடுவார்பார்
வகையான சாஸ்திரத்தைப் பாரார்பாரே (7)

சாத்திரமுஞ் சூத்திரமும் பார்த்துத்தேறு
சரியாகும் பொருளெல்லாம் வந்துகூடும்
பாத்திரமும் தூலிருந்தோர்க் கடுமைசெய்து
பதிவான அவர்பதத்தில் வீழ்ந்துவாங்கி
கோத்திரமும் நிதியதுவும் பெருகவேண்டி
குணமாகச் சித்தருக்குக் கூர்ந்துபாதம்
தோத்தரித்து மனதுதனில் தொழுதுபோற்றித்
தொல்லுலகில்மூன்நூற்றைத் தோய்ந்துபாரே. (8)

அயச்செம்பு.

தோய்ந்தரவி தானெடுத்து யிடைகருப்பித்
தொக்கநீறு சத்தியது ரெண்டிலொன்று
ஆய்ந்துபழச் சாறுவிட்டு அரைநேர்சாமம்
அதைக்கதிரி லிட்டுமொரு புடமுமிட்டுப்
பாய்ந்துகொடி யோனிறுத்துப் பாதிசேர்த்துப்
பகரிலிரு புடமேதான் செம்புமாகும்
ஆய்ந்துயெடு குகையிலிட்டு உருக்கச்செம்பாம்
அதிகசுயச் செம்பாம்நல் லிருப்புதானே (9)

சேந்தூரம்.

நல்லிரும்பு செம்புதனை நீயெடுத்து
நாடியிடு யிதுகேளே யேமந்தானும்
சொல்லினிய நையவடி சத்திவீரம்
சுருக்கஅரைத் தகட்டிடையாம் பூசிப்பூசிக்
கொல்லவதைப் புடம்போடக் கருப்பதாகும்
கொடியோனைச் சேர்த்தரைத்துப் புடமுமிட்டால்
வல்லமையாய் முருக்கம்பூப் போலாஞ்செம்பு
வழியறிந்து மதிதங்க வழிசொன்னாரே (10)

தங்கசெந் தூரமதை மதியிற்பத்து
தாக்கிடவே ஒண்ணுகொடு மாறலேமம்
செங்கையினு லெடுத்துவித்து ஞானம்பாரு
செல்வம்வரும் யாவருக்குஞ் சொல்லிடாதே
கொங்கணவர் கைபாக மிதுதான்பார்த்துக்
கொண்டாக்கால் சித்தியாங் தூணமுமாகும்
மங்கைமே லாசைகொண்டு மயங்காதென்று
மதிப்புறுசெந் தமிழாசை வழுத்தினாரே (11)

அயச்செம்பு

செந்தயினி மிடைசேரு சத்திதன்னைச்
சித்திபெற அரைத்துருக்கு சத்துமாகும்
மூர்த்தியிடு கல்வத்தி லிட்டடைத்து
முத்திபெறக் கொடியோனைப் பாதிசேர்த்துச்
சந்ததமுன் னீரதனு லரைத்துக்கட்டித்
தாட்டியாய் மூடுபுடம் போடச்செம்பாம்
பந்தவினை தீரும் யாகோபுசொன்ன
பதியரசர் போலிருக்க நாடுவாயே (12)

நாடுகபி அயச்செம்பு செய்துவித்து
நலமான சிவனங்கள் பண்ணித்தானும்
பாடுபெறத் தேசங்கள் மிகவுஞ்சுத்தி
பருதிமதி யுலகெல்லாங் குளிகையிட்டு
மேடுபெற மக்கத்திற் சென்றுபுக்கி
மேலான பெரியோர்கள்மீதிதன்னை
விடுபெற ஆராய்ந்து பேருங்கேட்டேன்
மெய்தெரிந்து யாகோபு செப்பினேனே (13)

செப்பினதோர் சாஸ்திரங்க ளெல்லாமெய்யாம்
சித்தர்தா லாராய்ந்து பாரார்க்கில்லை
ஒப்பினதோர் மனக்குரங்கோ டெறுட்டாது
உறுதிவைத்து யேறினுற் றள்ளிப்போடும்
உப்பினதோர் சிவன்விட்ட மாடுபோல
உற்றுமே சாஸ்திரத்தைப் பார்த்துப்பார்த்து
தப்பிதமாய்ச் செய்தமே தவித்துகொர்து
தாட்டிகமாய்ச் சொல்வார்கள் அழும்பர்தானே (14)

அழும்பாக வுப்பைவிட்ட ஞானிதானும்
அலமானப் பட்டமே அலுத்துச்செத்தான்
கழும்பான செம்பைந்தான் கொல்லாவாதி
கவிழ்ந்துமே வெகுபணங்கள் தோற்றுக்கெட்டார்
பழிபாவம் மனதுதனி லெண்ணுவாதி
பலைத்துமே உலகத்தில் மனிதர்பேச்சைத்
தழும்பாகச் சிரிக்காதே தான்கேட்டப்போ
தாட்டிகமாய்க் கேட்டுமவர் தவித்தார்தானே (15)

தானென்ற யாகோபு சொன்னவாதம்
தக்கதொரு பாகமதைக் கண்டுதேற
ஊனென்ற உலகத்தோர்க் கெதிரியாக
உண்மைசெ வாதமது வெளிதிற்காண
வானென்ற ஞானங்கள் மிகவுந்தோண
வழுத்தியே யெப்பொருளும் விளங்கவென்று
காணென்ற குளிகைமுதற் சென்றுதங்கள்
கருதியே பார்த்தாக்கால் தோணும்பாரே. (16)

தோணவே துருசுவிட்டார் சத்தேயில்லை
தொல்லுலகிற் செம்பில்லை கருதிப்பாரு
வாணவே யுயச்செம்பு மார்க்கமில்லை
வடிவான சுண்ணவகை வலுமையில்லை
ரணவே தாயில்லாப் பிள்ளையில்லை
இதமாக யிப்படிக்கே யெல்லாம்பாரு
நாணவே நாடுதனில் வாதிமார்கள்
நலமிலாப் பாகமதைச் செப்புவாரே. (17)

வங்கச்செம்பு.

செப்புவா ரின்னமொரு களங்குசேரு
செல்வம்வரு மிதைக்கருதிச் செம்பாய்ப்பாரு
அப்புடனே தனிக்குகையில் வைத்துருக்கி
ஆடிவரும் வேளைதனில் நாலுக்கொன்று
தப்புவார் சூதமது சேர்த்துருக்கி
தடையறவே கல்வத்திற் பொடியாப்பண்ணி
நப்புடனே நிறுத்துபெடு ஒட்டிசெட்டி
நலமாகக் கூத்தனைத்தா னிறுத்துக்கொள்ளே (18)

நிறுத்தெடையிற் பாதிதான் சத்திசேர்த்து
நோக முன்சாறு தன்னுலாட்டிப்
பொருத்தகனிர் காயவைத்துப் புடமுமிட்டால்
பொங்கியது கரிபோலத் தானிருக்கும்
கருத்தகுகை தன்னிலிட்டு வருக்கிப்பாரு
கசடற்று வெள்ளிபொன்போற் கண்விட்டாடும்
பருத்துபெடு கல்வத்திலிட்டுநீயும்
பதிவாக யாகோபு பயின்றவாறே. (19)

வாறுடனே கொடியோனைப் பாதிசேர்த்து
வண்மைபெற அரைத்துவில்லை காயவைத்து
தேறுபடப் புடம்போடச் சிலப்புமாகும்
திட்டமாய்ப் போட்டெடுத்தே உருக்கச்செம்பாம்
கோறபட மதியெட்டி லிரண்டுசேரு
கொடியதொரு காஞ்சனந்தா னிரண்டுசேர்த்து
காறபட வுறக்கிப்பார் யேமமாகும்
தாட்டிகவான் யாகோபு சொன்னவாறே (20)

சொன்னதொரு செம்பைமுந்திப் பண்ணிக்கொண்டு
சுருதியுறச் சீவனக்க ளதிலேபண்ணி
நன்னயமாய்ச் செலவுக்கு வைத்துக்கொண்டு
நாதாந்த ஞானத்தை மிகவேபார்த்து
வின்னமில்லா யோகமது தானேசெய்து
வியப்பாகக் கைமுறைக ளதிலேபண்ணி
பன்னகமாய் வாழ்கயா கோபுசொன்ன
பதிவான சுருதிதனைப் பார்த்துத்தேறே. (21)

பார்த்திடவே ஒளிவாகும் ஒளிவுதன்னைப்
பத்தியாய்க் கண்டுசுழி தன்னிலேறி
ஏத்திடவே குதிரைக்கோர் மையம்பூட்டி
எத்திசையும் வாழ்ந்தமிக யோகம்பார்த்தால்
சோத்திடவே மேனியது மிருகிப்போகும்
சூணமாகும் மணமாகும் கூர்மையாகும்
நாற்றிசையு மெய்த்திடவே ராஜயோகம்
நாடிவரும் மிந்நூலை நயந்துபாரே (22)

நயந்துமே நூலிருந்த படமறிந்து
நலமாக வாங்கிவந்து மடித்துநீயும்
பயந்துமே அடிதலையும் ஒத்துப்பார்த்தால்
பதிவான பாகமெல்லாம் அறிவிற்றோணும்
உயர்ந்துமே தங்கமெல்லாம் எளிதிலாகும்
உறுதியிது யாகுநபி உண்மைசொன்னார்
அயர்ந்துமே போகாமல் வாகியோகம்
அடிதொட்டு நுணிமட்டும் பார்த்திடாயே (23)

பார்த்திடவே வாதசித்தி வந்துதானுல்
பதிவான யோகசித்தி கூடனத்திலாகும்
ஏத்திடவே களங்குதனைச் சென்தூரித்தால்
இரும்பான செம்பெல்லாம் எளிதிலாகும்
போற்றிமன மகிழ்ந்திடுவார் பூலோகத்திற்
புகழ்பெரிய தெல்லாரும் புதுமைசொல்வார்
ஏற்றினதோர் தீபத்தைக் கண்டபோது
எளிதான இருளகலும் இன்பம்பாரே. (24)

இன்பமாய்ப் பெரியோர்க ளுண்ணும்உக்கா
இயல்பாக வாங்கியே குகையிலிட்டுத்
தென்புடனே உருக்கியபின் சாரம்போட்டுத்
தெளிவாக பிலுப்பைநெய் தன்னிற்ருனும்
அன்பாக பிருபத்தோர் தரமேசாய்க்க
அதிலிருக்குங் கண்ணதுவுஞ் சிறுகண்ணுகும்
முன்பாக யெடுத்துநிறு பலமும்நாலு
மூத்திதருஞ் சிவவிந்து பலமுங்காலே. (25)

காலாகத் தானிறுத்து உருக்கிக்கல்வம்
கருத்துவைத்து உடைத்தபின்பு கருதக்கேளு
நூலாக நீர்பூத்தன் ஒட்டிரெட்டி
நுணுக்கமாய் நிறைசேர்மூன் பழச்சார்விட்டு
ஏலாக அரைத்துரவி காயவைத்து
இயல்பாகக் குக்குடத்திற் போட்டுக்கல்வம்
காலாக யிட்டிடயாக் கோபுதானும்
நலமதனைச் சொல்லுகிறேன் நாடிக்கேளே. (26)

நாடியே நிறுத்தயிடை பாதிதாரம்
நலமாகச் சேர்த்துஅரை மூன்சார்தன்னிற்
கூடியே வில்லைதட்டிக் கதிரில்வைத்துக்
கொக்கினுட புடம்போட்டுக் கல்வமிட்டுப்
பாடியதோர் கொடியோனைப் பாதிசேர்த்துப்
பதிவாக அரைத்திடவே கையாரோல்
வாடியே வில்லைதட்டிக் கதிரில்வைக்க
வளம்பெறவே யாகோபு வழுத்தினுரே. (27)

வழுத்தியே புடமிடவே சிவக்கும்வில்லை
வடியாக வெடுத்துடனே காரங்கூட்டி
அழுத்தமா யுருக்கிடவே ரவியுமாகும்
ஆண்மையுள்ள செம்பதுவைத் தியானஞ்செய்து
பழுத்திடவே உருக்கியிடை தங்கஞ்சேரு
பதிவான பேமமாம் பாரிலோர்க்கு
உழுதிட்டுப் பயிரிட்ட வாறதாகும்
உண்மையா யாகோபு ஓதினேனே. (28)

ஓதியதோர் மக்காவின் தேசந்தன்னில்
உறுதிபெற்ற நபிமார்கள் மெத்தவுண்டு
வாதியவ ரெல்லோரும் ஏமஞ்செய்வார்
வாய்பேசார் கேட்டாலுஞ் சொல்லமாட்டார்
சாதிபல பேருடனே சொல்லுவார்பார்
தன்மையவர் கோபந்தான் மெத்தவுண்டு
கோதிலா மனதுவர நடந்துகொண்ட
குற்றமில்லா யாகோபு கூறினாரே. (29)

கூறிவிட்டார் யாகூபி கேட்டுக்கொண்டு
குணமாக வென்பேரு விளங்கத்தானும்
பாறிட்ட வுலகிலெழு நூறுதானும்
பாடியபின் மூன்றூறு பாடிச்சென்று
கோலிட்ட களங்கோடு செந்தூரங்கள்
கொட்டினேன் குணமாகக் கூர்ந்துபார்த்து
நீறிட்ட திருமதில்போல் காட்டினேன்பார்
நீலிலத்தில் நிசமாகக் கறைகண்டேனே. (30)

கறைகண்டன் பவமெடுத்துக் கரியிலிட்டுக்
கடுமைபெற வூதிடவே சலவையாகும்
மறைகண்டன் நாவிலொன்று வன்னிகெற்பம்
மதிமயங்கப் போகாமற் கல்வத்திட்டுச்
சிறைகொண்ட பாவணிபோ லரைக்கமுன்னீர்
சித்திரமா யரைத்துவில்லைக் கதிரிற்காய்ந்து
துறைகண்டு புடம்போட்டுக் குகையிலிட்டுத்
தூக்கிமெள்ள வுருக்கிடவே சத்துமாமே. (31)

சத்தான சத்தைத்தான் உடைத்துப்பார்க்கச்
சரிவாவே வெங்கலம்போற் ருணுமாகும்
முத்தான தது போலாங் கல்வத்திட்டு
முடிவாகக் கொடியோனே முழுக்கவிட்டு
பத்தான நாழிகைதா னரைத்தவில்லே
பதிவாகக் கஞ்சில்வைத்துப் புடத்தையிட்டு
செத்தாணைப் பார்த்தாக்கால் சிவப்புமாகும்
செப்பிஞர் யாகோபு செல்வத்தானே. (32)

செல்வமதாஞ் செந்தூரம் நாலுக்கொன்று
சேர்த்தருக்கக் காரத்தைச் செம்புபோலாம்
மல்கவே சோதிரவி தன்னைத்தானும்
மார்க்கமா யெடுத்துயிதில் நாலிலொன்று
நல்கவே யேமமிட்டு உருக்கிப்பின்பு
நன்றுகத் தகடடித்து நாதவீரம்
மெல்கவே யரைத்துமே கவசங்கட்டி
மெதுவாகப்போடுமெனச்சொன்னேன்யானே(33)

சொன்னதிரி புடம்போடக் களங்கதாகும்
சுகமயமாங் கொடிச்சியைத்தான் பாதிசேர்த்து
நன்னயமாய் மூச்சாமம் முன்னீராலே
நாடியரைத் தேவில்லே கஞ்சில்வைத்துப்
பின்னமில்லா மற்றுனே புடமூன்றிட்டால்
பிலக்குமே செம்பாகும் பெருமைசெம்ப
கன்னல்போல் ருசியாகும் வாதப்போக்கு
காட்டினுர் யாகோபு கருத்தாய்த்தானே. (34)

கருத்தினுறை செந்தூரம் மதியிலிட்டுக்
கனமாக நிறுத்திரண்டு கொடுத்தருக்கு
வருத்தமில்லா மாத்தெட்டு ஞணிக்கொக்கும்
வடிவாகப் புடமிறங்கும் வண்மையோர்க்கு
திருத்தமிலா யிப்பொருளே வித்தைத்தானும்
திட்டமா யுண்டுடுத்தி யோகம்பாரு
பொருத்தமுடன் ஞானவழி கூடுமென்று
பொறுமையுள்ள யாகோபு சொன்னுர்தாமே (35)

சொன்னதிந்த மூன்றிற் களங்கம்பண்ணு
சருதியொடு செந்தூஞ் செய்தாயானால்
கன்னல்பெறச் செம்பாகும் தங்கஞ்சேர்த்துக்
கருத்துறவே செந்தூரம் பண்ணிக்கொள்ள
இன்னிலத்தில் ராஜயோ கத்தைத்தானும்
இதமாகப் பெறுவீர்க ளிதமாய்ச்சொன்னேன்
தன்னகரிற் சித்திபெற்று வாழ்வீரென்று
சாற்றினார் யாகோபு தன்மைதானே. (36)

தண்மையென்ன வுலகத்தில் வாதிதானும்
தாக்கிடவே களங்குசெய்து லோகத்துள்ளே
உண்மையாய்க் கொடுத்தருக்கி யூதும்போது
உதிரியாய்ச் சிதறிவிடும் வர்ணம்போகும்
வண்மையாய் வாதம்பொய் யென்றுசொன்ன
மார்க்கமதுக் கென்செய்வேன் தேங்காய்தன்னைப்
பெண்மையாய் நாயுருட்டும் வாறுபோலே
பேசினார் யாகோபு பெருமைதானே. (37)

பெருமையாய் உப்பறிந்த வாதிதானும்
பேருலகிற் செம்பெடுத்து வேதைபார்ப்பார்
அருமையா யவர்சொல்ல மாட்டாரையா
அடைவாகக் காணுது வாதந்தானும்
உருமையாய்ச் சொல்லியே புலம்புவார்கள்
உற்றுணர்ந்து யாகோபு வுறுதிசொன்னார்
மருமையாய்ச் சொன்னலும் தெரியாமூடர்
மதியாகக் காணார்கள் மடையர்தானே: (38)

மடையனுப்ப் போகாமற் செம்பைப்பாரு
மார்க்கமாய்ச் சீவனங்கள் பண்ணலாகும்
கடையசாய்த் திரியாமல் வாசியோகம்
கற்றுணர்ந்து பதவிதனிற் கருத்தையுண்ணு
தடையாகச் சொல்லாதே வாதந்தன்னை
தாட்டிகமாய்க் கைபாக வரிசைபாரு
கொடையாக வேயானு மனேகம்போக்கு
கொட்டினேன் யாகோபு குறிப்புப்பாரே. (39)

குறிப்பாகச் செய்துபார் பாகந்தப்பிற்
குணமாகச் சேம்பெடுக்க வருகாதப்பா
தறிப்பாகப் போயிவிடும் தன்மைசொன்னேன்
தாக்கறிந்து தங்கமில்லை தறிக்கமாட்டாய்
நெறிப்பாக உன்மனதைத் தேற்றிக்கொள்ளு
நிலையான வாதம்வரும் யோகம்பாரு
உறிப்பானே தயிரெடுத்தாப் போலேயாகும்
ஒதினேன் யாகோபு உண்மைதானே. (40)

உண்மையுள்ள கல்லுப்புச் சுண்ணந்தன்னை
ஒதரிது ஒதுகிறே னுண்மையாக
தண்மைபடச் செய்துகொண்டா லெல்லாஞ்சுண்ணந்
தாக்கினுல் மலையேம மாகும்பாரு
வண்மையுள்ள சரக்கெல்லாம் மாண்டுபோகும்
வடிவான வாதம்வரும் வகையுமாகும்
பண்மைபடை யாகோபு பகர்ந்தவுப்பைப்
பதிவான நிலையறிந்தோர் பார்த்துய்வாரே. (41)

கல்லுப்புச்சுண்ணம் செயநீர்

பார்த்துமே கல்லுப்புப் படியுமொன்று
பதிவான நவச்சாரம் படியுமொன்று
ஏத்துமே கல்வத்தி லிதனைக்கொட்டி
இழுத்தரைப்பாய் நாயுருவிச் சாறுதன்னில்
காத்துமே வில்லைகட்டிக் கதிரில்வைத்து
கனிவாகப் புடம்போட்டுக் கல்வத்திட்டு
நாற்றிசையு மெய்த்திடமுன் சாறுவிட்டு
நன்றாக வேயரைக்கலஞ் சொன்னேனே (42)

நலமாக அரைத்துகதிர் காயவைத்து
நாடிமிகப் புடம்போடு சுண்ணமாகும்
பிலமாகச் சுண்ணத்துக் கிடைதான்சாரம்
பிசகாமற் சேர்த்தரைக்கச் சிவப்பதாகும்
வலமாக உமிநெருப்பில் வறுத்துப்பின்பு
வடிவாகக் கவசம்வைத்துப் புடமூமிட்டுக்
கலமாகப் பனியில்வைக்கச் செயநீராகும்
காட்டினுர் யாகோபு கருத்தாயத்தானே. (43)

கருத்தாகச் செயநீரில் வீரம்பூரம்
கனிவாகப் போட்டிடவே சிவப்புமாகும்
வருத்தாக யின்னீரு சகலமெல்லாம்
வடிவாகக் கட்டியது வடிவுமாகும்
உருத்தாக உப்பைவிட்டோர்க் குறுதியில்லை
உலகத்தில் வாதமில்லை யுற்றுப்பாரு
பெருத்ததொரு உப்பினுட சுண்ணம்போலப்
பெருமைகண்டு யாகோபு பேசினேனே. (44)

கெந்தகச்செம்பு

பேசினேன் கெந்தகத்தின் செம்புகேளு
பெருமைதரும் நெல்லிக்காய் கெந்திதானும்
வீசியே பலம்பத்து நிறத்துக்கல்வம்
விருதுபட விட்டுமே வீரங்காலாய்
வாசியே செயநீரா லரைமுச்சாமம்
வடிவாகக் குண்டுமணி போலேபண்ணி
பாசியே நிழலுலர்த்தி வைக்கவேதான்
பதிவாக யாகோபு பலன்சொன்னேனே. (45)

தருசுகெந்திசெம்பு

பலனுகக் கறைகண்டன் பலமும்பத்து
பாச்சியரை பழச்சாறு தன்னிலாட்டிப்
பிலனுக உமிநெருப்பில் வருத்துப்போட்டு
பிசகாம லோட்டிலிட்டுப் புடமுமிட்டு
அலனுக உருக்கிடவே ரசியுமாகும்
அயமதனிற் பாதியிட்டுக் குகையில்வைத்துக்
கலனுகத் தண்ணீர்போ லுருக்கியிட்டுக்
காதலுடன் யாகோபு காட்டினாரே. (46)

காட்டிடவே முன்னுண்டை கிராசம்போடு
கதிபெருகயிடைக்கிடைதான் கண்டுகொள்ளு
மூட்டிடவே சத்தாகும் எடுத்துப்பாரு
முடிவான வெங்காரம் காலிலொன்று
தேட்டிடவே கொடுத்துருக்கக் கசடுநீக்கும்
திடமாக பெடுத்துமே கல்வத்திட்டு
மாட்டிடவே பத்தலது பாதிசேரு
மகிழ்வாக யாகோபு பயின்றவாறே. (47)

வாறேது முன்னீரா லரைத்துக்கொண்டு
வகையான வில்லேதட்டிக் கதிரில்வைத்து
காறமாய்ப் புடம்போடச் சிவக்கும்கல்லாய்க்
கனிவாகக் காரமதைக் கொஞ்சமிட்டுப்
பாறிலே உருக்கிடவே அலரிப்பூப்போற்
பதிவான அயச்செம்பாம் பாரிலோர்க்குக்
கூறிதுதான் வேதைரெம்ப வோடும்பாரு
கொட்டினார் யாகோபு குணமாய்த்தானே. (48)

குணமாக அயச்செம்பை யுருக்கும்போது
கொட்டிடுமே நாலிலொன்று தங்கத்தாலை
மணமாகத் தங்கமிடை நாகம்போட்டு
மதிபாக வுருக்கையிலே சொல்லக்கேளு
உணவாக முன்னுண்டை கெந்திதன்னை
உறுதிபெற மிடைக்கிடைதான் தாக்கச்சத்தாம்
பணமாகக் கல்வமிட்டே உடைக்கச்சொன்னார்
பத்தியுள்ள யாகோபு பயின்றவாறே. (49)

பயின்றிட்ட பத்தலதைப் பாதிசேர்த்துப்
பதிவாக முன்னீரிற் பதியஆட்டி
நயின்றிட்ட வில்லேபண்ணிக் காயவைத்து
நலமாகப் புடம்போடச் செந்தூரிக்கும்
உயின்றிட்ட செந்தூர மகிமைசொல்ல
உறுதியுரை ஆண்டவரும் மயங்கிநிற்பார்
கயின்றிட்டு யான்கண்டேன் யாகோபென்பேர்
காட்டினேன் யிதுபெருமை கணக்குப்பாரே. (50)

கணக்காகச் செம்புநால் தானுருக்கிக்
காட்டிடவே ஒன்றுயிடை கனகமாகும்
பிணக்காகச் சொல்லவில்லே யிந்தநூலிற்
பெருமைமெத்தப்புத்தியுள்ளோரிந்துகொள்வார்
ஊணப்போது நில்லாது சரீரந்தானும்
தான்சித்தி பெறவென்றுல் அயத்தைப்பாரு
குணக்கில்லா யாகோபு சொன்னரீதி
கொட்டினேன் வாதமதைக் கொள்ளுதானே (51)

கொள்ளெனென்ற யிரும்பான செந்தூரத்தைக்
கொண்டுமொரு மண்டலத்திற்கொடிதாய்நோய்கள்
பிள்ளைசிறு பாலரைப்போ லிருக்குமேனி
பெரியோர்க ளுரைப்பார்கள் புத்தியோடே
வெள்ளம்வரு முன்னேதான் அணைகள்போட்டால்
விருதாவாய்ச் சாக்காடு யில்லையில்லை
உள்ளபடி பார்த்துணர்யா கோபுசொன்ன
உறுதியிது ரசவாதி கண்டுதேறே. (52)

சேம்புசத்து

கண்டுவெடி சூரியனைக் குகையிலிட்டுக்
கனிவாகயிவ் விடைரா ரும்பூதாக்கு
உண்டுவிடுஞ் சந்தாகுங் காரங்கூட்டி
உருக்கிநல்லாய்க் கனமாகக் கல்வத்திட்டு
பண்டுபடு கொடியோனைப் பாதிசேர்த்துப்
பருத்திச்சா றதனுலே அரைத்துவில்லை
கொண்டுகதிர் காயவைக்கச் சொன்னேன்பாரு
குரம்பையுட புடம்போடக் குருவுமாமே (53)

குருவாக அதையெடுத்து வைத்துக்கொண்டு
குணமுள்ள கறைகண்டர் பலமும்பத்து
திருவாக ஆறுதாம் சாற்றுலாட்டித்
திறமாகப் பெரியபுடம் போட்டெடுத்து
உருவாகக் குகையில்வைத்து வுருக்கச்செம்பாம்
உத்தமெடு பலமிரண்டு வைத்துருக்கக்
கருவாக மூன்குருவை யிடையேயீயக்
கண்டுசொன்னர் யாகோபு கருணைதானே. (54)

கருணைவைத்துச் செம்பதுவுங் கட்டியாகும்
கர்த்தாவைத் துதிசெய்து வெடுத்துமெள்ள
தருணமதில் வேழஜவில் மூன்றுசேரு
தக்கதொரு வேமமே பாதிசேரு
அருணைநகர் போலதுவே வேமமாகும்
அதையடித்துப் புடம்போட பிறங்கும்பாரு
திருவினு ருள்ளதனை வெடுக்கச்சொன்னர்
திறமான யாகோபு திண்ணந்தானே. (55)

திண்ணமுட னிச்செம்பைக் தண்டுநீயும்
சிக்கிரமா யெடுத்தாக்காற்செல்வமாகும்
உண்ணவுடி ஞானமுடன் யோகம்பாரு
உத்தமே சுபிமாரை வணங்குகுன்றும்
எண்ணமுடன் சொல்லாதே யிதருலாகி
இல்லல்லா வென்றுநீ யின்பமுற்றுப்
பெண்ணுறவு தன்னைவிட்டுப் பிரிக்குநீயும்
பெற்றிடுவாய் சுழிமுனையிற் பிரியம்வைத்தே. (56)

பிரியமுடன் பெரியோராய் நடக்கவென்றுற்
பேசாமல் அயச்செம்பைப் பேணிப்பாரு
குறியாகப் பொன்செய்ய வேணுமென்றுற்
குணமாகக் கெந்திபைத்தான் குறிப்பாய்ப்பார்த்து
வெறியாகத் திரியாதே யிற்றால்தன்னை
விருப்பமா யடிதலையும் உற்றுப்பாரு
சிறியவனு யிருந்தாலும் புத்தியாலே
சீர்தூக்கிப் பாரென்றுர் திறமாய்த்தானே. (57)

சாரக்கட்டு

பானென்ற தோதுவும் பலமும்நாலு
பாகமாய்ச் சீவியதை வைத்துக்கேளு
கானென்ற வளையமது பலமும்பெட்டு
கட்டியைநீ யொடித்துத்தேர் கீழ்மேலிட்டு
வானென்ற வடமதுவும் பலமும்நாலு
வகையாகப் பெடித்துத்தேர் கீழ்மேலிட்டு
தானென்ற அஞ்சுரு வாணிதன்னைத்
தாட்டிகமாய்ப்பலம்நாலு தண்மைதானே (58)

தண்மையாய்ப் பொடித்துமே கீழ்மேலிட்டு
தக்கபொடி கிடத்துக்குள் நடுவில்வைத்து
உண்மையா யதன்பேரில் மணலையிட்டு
உறுதியா யமுக்கியே அடுப்பில்வைத்துப்
பெண்மையா யிருசாம மெரித்துப்பாரு
பெருமைபெற வுருகியே கட்டிநிற்கும்
வண்மையா யெடுத்துமே வைத்துக்கொள்ளு
வகையாக யாகோபு வழுத்திரூரே. (59)

வழுத்தவே சோரமது கரண்டியிட்டு
வகையாக வுருக்கியே யிலுப்பைநெய்யில்
அழுத்தமாய்ப் பதினேழு தரமேசாய்த்து
அதையெடுத்துக் கரண்டியிட்டு உருக்கிக்கொண்டு
முழுத்தமாய் மூன்கட்டுத் தேரைப்போட்டு
முடிவாகக் கட்டியது மணியுமாகும்
இழுத்தபடி வாதிக்கும் வாதங்காணும்
இனம்பழுக்கும் யாகோபு எழுதினாரே. (60)

எழுதியதோர் நாகமணி யுருகும்போது
எத்தமுள்ள யேமமதை யிடையேதாக்கு
பழுதில்லா திவ்விரண்டும் சேர்த்துத்தானும்
பாரமா யுருகிநிற்கும் வேளைதன்னிற்
குழுகுழுவே நாரும்பு யிடையேதாக்கு
கொக்கரித்து வாங்கியது கரிபோற்றாளாம்
வழுதியே யாகோபு சொன்னரித்தை
வையகத்தி லவர்பேரு விளங்கத்தானே. (61)

விளங்கவே தானிந்தக் கரிக்குத்தானும்
வெற்றிபெருங் கொடியோனைப் பாதிசேர்த்து
உளங்குளிரப் பொற்றலையின் சாற்றுலாட்டி
உருவில்லை காயவைத்துப் புடமூன்றிட்டால்
பழமான தருபோலே சிவந்துநிற்கும்
பாசுமா யெடுத்துமே வைத்துக்கொண்டு
தளம்பெறவே யாகோபு சொன்னகோர்மை
தக்கதோர் புதுமையதாந் தண்மைபாரே. (62)

தண்மைபார் செம்புருக்கில் நூற்றுக்கொன்று
தான்கொடுக்க மாற்றதுவும் பத்துமாகும்
உண்மைபார் சாயமது நிறமதாகும்
உறுதியுள்ள நபிமார்க ளாடுமோட்டம்
எண்ணமபார் உலகத்திற் செல்லலேண்டாம்
இதுகண்டால் வெகுபேர்தான் செய்வாரென்று
வண்மையாய் சரக்கதுவும் பாஷையாக
வழுத்தினேன் யாகோபு வளஞ்சொன்னேனே (63)

வளமைபார் தங்கத்தில் நாகஞ்சேர்த்தால்
வையகத்தில் மண்ணோடு வெல்லாந்தங்கம்
கிழமைபார் செம்புமுதல் வேதையாகும்
கெட்டியுள்ள நவலோக மெல்லாந்தங்கம்
பழமைபார் வாதமதுளளிதிலாகும்
பழங்கதைகள் சொன்னலே பதிவுமில்லை
கழகசரி யாகோபு சோதித்தேதான்
கருத்துவைத்து மூன்றூரிற் கருதினாரே. (64)

கருதியே மக்கத்தில் நபிமாரெல்லாம்
கண்டுரச வாதமதைக் கருத்திற்பூண்டு
வருதியே யெத்தேச காலஞ்செய்து
வகையான சீவனத்திற் கிடமேபண்ணி
சுருதியே வேதங்கள் மிகவுமோதி
சூட்சமுள்ள ஆண்டவனைத் தோத்தரித்துப்
பருதியே ரொட்டியைத்தா னுண்டுதேறி
பத்தியுள்ள யாகோபு பயின்றவாறே. (65)

திருசுச்சுண்ணம்

பயின்றிடவே தருசினுட நீறுகேளு
பதிவான பலமொன்று நிறுத்துக்கொண்டு
கயின்றிடவே சுக்காநீ ரித்திரீயும்
கருதிபெறவே துணிபதனிற் பூசிகன்ருய்த்
தயின்றிடவே நீலன்மேற் கவசங்கட்டித்
தடையறவே ரவியில்வைத்து தண்மைகேளு
குயின்றிடவே அப்புதான் சேருநாலு
கொண்டுவா வென்றுசொன்னார் குணமாய்த்தானே

கொண்டுவந்து சட்டியிட்டு உருக்கிக்கொண்டு
குணமாக மூன்றுருசு அதிலேபோட்டுப்
பண்டுபட அமுக்கியிடி சாமமொன்று
பதிவாக அப்புதா னிழுத்துக்கொள்ளும்
கண்டுபடக் களிமபுதான் வங்கமாகும்
களிவாக லவணமது வெளுத்துநீறும்
முண்டுபட அதைப்பிரிக்க வெள்ளையாகும்
மூத்திதரும் யாகோபு மொழிந்தவாறே. (67)

முத்திதரக் கிளிஞ்சிநீர் பலமுமொன்று
முக்கியமாய்ச் சிகரமது நாலிலொன்று
பத்தித்தற னரையதுவு மஞ்சளாகும்
பதியவெடு முன்தருசு மேலேகட்டு
வெத்திபெறக் கவுதாரிப் புடமுமிட்டால்
விருக்கிட்ட தருசனவும் நீரிப்போகும்
குத்தமத்து றீறிங்காண் தருசுச்சுண்ணம்
கோடுதரும் யாகோபு கூறினாரே, (68)

கொடுமையுள்ள தருசுநீர் விராலிக்கிட்டு
கூட்டியரை நீராகும் அன்னீர்தன்னில்
அடுமையுள்ள யிரதமது பலமுமிட்டு
அயக்கரண்டி யிட்டுமே கொதிக்கவைத்துப்
படுமையது ரசமிருகி மணியுமாகும்
பக்குவமா யெடுத்துமே பாகங்கேளு
தமொரு தெலுமிச்சம் பழத்துள்வைத்து
தாட்டிகமாய்ப் புடம்போட யிருதுப்பாரே. (69)

இருக்கியெடு யிரதமலைத்க் கரியில்வைத்து
இகமாக விருக்கிடவே யுருகிநிற்கும்
பெருக்கமுடன் மாதமது யேவல்கேட்கும்
பேசாத உபாசங்கள் சத்துவூட்டும்
பருக்கவெடு துவராமிட்டு இடையிற்கட்டு
பதிவான வித்திருகும் மணியுமாகும்
உருக்கமுள்ள காயசித்தி யுடனேயாகும்
உற்றுணர்ந்து பார்த்தக்கா லுருதியாமே. (70)

உறுதியாஞ் சூதமது கட்டினுக்கால்
உற்றரச வாதமது ஒழுங்குதாகும்
அறுதியாய் வெள்ளீயம் வெள்ளியாகும்
அடவான பொன்னெல்லா மதிகமுண்டு
பருதிமதி பார்த்தவிடம் யேமமாகும்
பதிவான வசியமாம் பாரிலோர்க்குச்
சுருதிபட யாசோபு சொன்னநேர்மை
சூஸ்திரத்தை யராய்ந்து தோய்ந்துபாரே. (71)

தோய்ந்தபார் தருகினுட நீரினூலே
சுத்தமாம் முகம்மதுவின் மார்க்கத்தாரும்
ஆய்ந்துமே மக்காவின் தேசந்தன்னில்
அவரவர்கள் வீடுதனில் வாதஞ்செய்து
பாய்ந்துமே நபிமார்க ளென்றுசொல்லி
பத்திபாய் நால்வேத முடிந்ததேசம்
காய்ந்துமே அத்தேசஞ் சென்றுபுக்கி
காட்சியெல்லாங் கண்டறிந்த கணக்குமாமே (72)

கணக்காக நால்வேதங் கண்டோர்பாதம்
கருத்திலுள்ள வாதமெல்லா மூடனேயாகும்
பிணக்காகச் சொன்னவர்க்கு ஒன்றுமில்லே
பிரட்டுதரான் சொன்னர்க்கு நாகமாகும்
தணக்காக மூன்றூற்றைத் தோய்ந்தபாரு
தக்கநபி மார்களேயே கண்டுபூசி
உணக்காக விண்டுசொன்னேன் யாகோபென்பேர்
உறுதிமெத்த பென்வசனம் பொய்போகாதே (73)

போகாதே யென்பேரு ராமதேவர்
புங்கினேன் மக்காவின் தேசந்தன்னிற்
சாகாதே காலுயுக மிருந்துசாரம்
தனேத்தொட்டு வேகைகள்தான் செய்தேனப்பா
ஆகாதே அவடத்தில் நபிகளெல்லாம்
அனேவோருஞ் சாரத்தைத் தள்ளிப்போட்டு
ஏகாதே சூதமது குளிகைகட்டி
பெனக்குத்தான்சொன்னர்கள்யெய்தினேனே (74)

எய்தியே மனந்தனேயே நிறுத்திஞானம்
இருந்துரைத்தேன் மக்காவின் தேசந்தன்னில்
உய்தமீம வெகுகாலா யங்கிருந்தேன்
ஒருவருக்கும் தெரியாம லறிந்துகொண்டேன்
பய்தியே சிறியோரும் பெரியோர்தானும்
பக்குவமா யெல்லோர்க்கும் ஞானமுண்டு
நய்தியே பெண்ணினுட வாடையாகா
நலமாக யிருப்பார்கள் பொய்சொல்லாரே. (75)

பொய்சொல்லா ரவர்களுட தேகந்தானும்
பூரணமாய் ரத்தமது முத்திநிற்கும்
வைத்திடுவார் உண்மையுள்ளார் வலுவுமுள்ளார்
வலுவாகத் தன்னுயிரை யெளிதிலேதான்
நைத்திடவே நினைத்திடுவார் பிறகியில்லார்
காட்டிலுள்ள சுபிமார்கள் பிழைக்கும்நேர்மை
மெய்சொலவார் புத்தியது மிகவுமுண்டு
மேதினியி லத்தேசம் வேதமாமே. (76)

வேதமா மவர்களுக்குச் சிரசில்தொப்பி
வேதாந்த மார்க்கத்தார் வெள்ளிதன்னில்
பாதமாந் தொழுதிடுவோர் பத்திமெத்த
பகலுறக்க மில்லாத பிரிவுமெத்த
சேதமிலாத தன்னுடைய மனதுதானும்
சித்திபெற்று வலுவாகப் பேசுவார்கள்
நீதமாய் மனதுதா னிருக்கும்பாரு
நித்தியரா மத்தேச வழக்கம்பாரே. (77)

வழக்கமா மக்காவின் தேசந்தன்னில்
வாஞ்சையாய்த் தமிழனவன் போனுற்கேளு
பழக்கமாய் தன்னுடைய மார்க்கந்தன்னிற்
பதிவாகச் சேர்த்திடுவார் புத்திசொல்வார்
புழக்கமா யிசுலாத்துப் பண்ணுவார்கள்
புகழ்பெறவே இருங்களென்று சொல்லுவார்கள்
சழக்கில்லா நால்வேதம் மெய்யதாகும்
தரிகூடா மெய்யதனைச் சொல்லக்கேளே. (78)

சொல்லவே நால்வேதம் லெப்பைமார்கள்
சொற்பெரிய உலகத்தில் கர்மிதன்னை
மெல்லவே ஆண்டவனைக் காட்டுமென்பார்
மேதினியிற் பணம்பொன்னுக் காசைவைத்து
நல்லவே சொல்லியிட்டுப் பணம்பிடுங்கி
நலமாக உண்ணுயவ ரேய்ப்பாரப்பா
உல்லவே நால்வேதக் காரனுக்கு
உண்மையுள்ள ஆண்டவனும் மெய்யுமாமே. (79)

ஆண்டவனும் ஆரென்றுற் செல்லக்கேளு
அருமைபடப் பெற்றவனும் ஆண்டமார்கள்
பாண்டவர்க ளானதொரு ஆண்டமார்கள்
பதிவான காலவேத ஆண்டமார்கள்
தூண்டநின்ற விளக்கதுவும் ஆண்டமார்கள்
தொல்லுலகில் ரசவாதி ஆண்டமார்கள்
மூண்டவனும பிறந்தோர்கள் ஆண்டமார்கள்
முத்திபெற யாகோபு மொழிந்தவாறே. (80)

அடிமணி.

மொழிந்தஅயந் தானெடுத்து ராவிதீயும்
முக்கியமாய்ப் பலமிரண்டு தாசிரெண்டு
அழுந்தியெடு இரண்டுடனே வாழ்மடந்தை
அதுமூன்றுஞ் சேர்த்துமே கல்வத்திட்டு
வழிந்துஅரை கன்னிச்சார் தன்னுலாட்டி
வாழ்குகையி லிட்டுநீ யுருக்கிப்பாரு
பழுந்துமணி போலிருக்கும் பார்த்துக்கொள்ளு
பத்தியெடு உத்தமமாம் பரிவதாமே. (81)

பரிவாக உருகிநின்ற மணிக்குப்பாதி
பக்குவமாய் வண்டிலதைச் சேர்த்தரைத்துப்
பிரிவாக உருக்கிநல்லா யெடுத்துக்கொண்டு
பேசரிய கல்வமிட்டுப் பின்புதானும்
வரிவித்து விட்டாட்டிக் கொடியோன்பாதி
வைத்தரைத்து வில்லைதட்டிக் கதிரில்வைத்து
விரிவாகப் புடமதனைப் போட்டுப்பாரு
வித்தகருஞ் சிவப்பாகும் விளம்பினேனே. (82)

விளம்பினேனும் மதியேழில் மூன்றுதாக்கு
விதமாக உருக்கியபின் யேமம்மூன்று
தளம்பியே சேர்த்துருக்கிப் பார்க்கும்போது
தாட்டிகமாய் வயதுவும் பெட்டுமாகும்
குளம்பியே பிதைவித்துச் செலவுசெய்து
கூசாமல் உண்டபின்பு ஞானம்பாரு
வளம்பியே சுழிமூனையில் மனதைப்பூட்டி
வடிவாக யாகோபு வழுத்தினேனே (83)

வடிவான வாதங்கள் வந்தபோது
வகையாக மவுனத்தை மனதிலுன்னி
முடிவான கைகளீரைந்து இருக்கும்பி
முத்திக்கு வித்தாகும் முதன்மைபூண்டு
படிவாக வொருவருக்குச் சொன்னுல்நீயும்
பத்திமுத்தி யில்லாம லழிந்துபோவாய்
குடிவான இவ்வசனம் நினைவிற்பூண்டு
குத்தமத்த கண்டிதத்தைக் குணமாய்ப்பாரே. (84)

அயச்சேம்பு.

குணமாக அயசெம்பு சொல்லக்கேளு
குத்தமத்த கருப்பிலைத்தான் முழிகொண்டு
தனமாக யிதுக்குரெட்டி நீலநாத்தம்
சாதகமா யிதுக்குகிகர் சூதர்தூக்கு
பணமாக எலுமிச்சம் பழத்தாலாட்டிப்
பத்திசெய்து புடம்போட்டு உருக்கச்சத்தாம்
கனமாக வண்டிலிட்டுக் கொண்டுசேர்த்துக்
கணக்காக அரையாகுஞ் சொன்னவாறே. (85)

சொன்னதொரு முன்சாத்தா லரைத்துருக்கச்
சொல்லொண்ணு மணியாகுங் கல்வத்திட்டு
நன்னயமாய்க் கொடியோனைப் பாதிசேர்த்து
கல்லரைக்கப் பூத்துவிடும் வில்லைதட்டிக்
கன்னல்போல் புடமிட்டு யெடுத்துப்பாரு
கருணைபெறச் செந்தூரம் வண்டிலிட்டு
உன்னிதமா யுருக்கிடவே செம்புமாகும்
உறுதியிது யாகோபு உண்மைபாரே. (86)

உண்மையுள்ள அயச்செம்பு பலமும்நாலு
உத்தயெடு உருக்குமூகம் நாலிலொன்று
தண்மைபெருந் தங்கமது சோரம்லொன்று
தாக்கிவிடு அப்புவொன்று உருக்கியாட்டி
பண்மைபடக் கல்வமிட்டு உடைத்துப்பின்பு
பதிவான சூதமொன்று கருப்பூவொன்று
வெண்மைபடப் பொற்றலியின் நீராலாட்டி
வெத்திபெறப்புடமிடவேசொன்னேன்பாரே. (87)

புடமிதுவே கருப்பாகும் பெருத்துக்கல்வம்
பூட்டியரை முன்னீரால் கொடியோன்பாதி
தடமிடவே சேர்த்தரைத்து வில்லைதட்டித
தாக்கிடவே தீர்வைத்துப் புடமூன்றிட்டு
குடமாக வெடுத்திடவுசெந் தூரமாகும்
கொள்ளுமம்பால் வாதமது குருக்குவேதை
படமாக ரவிநூற்றுக் கொன்றுதாக்கப்
பதித்திதரும் யேமமாம் பரிந்துபாரே. (88)

பரிந்துமே யிவைபித்துச் செலவுசெய்து
பாரதிரும் ஞானவழி மதியில்நில்லு
வருந்துசுழி முனையதிலே யேறலாகும்
வண்மைபெறக் காயசித்தி யோகம்பாரு
தெரிந்துமே வகைபாக வரிசையாகத்
திட்டமாய்ச் செய்திடவுந் தீர்க்கமாகும்
பரிந்துமே யாகோபு சொன்னரித்தைக்
காதலுடன் ரசவாதி கண்டுபோரே. (89)

கண்டுபார் பணவிடைதான் பாலிலுண்ணக்
காந்திகதிர் போலவுமே கனகமாகும்
பண்டோர் மண்டலத்திற் சரீரங்காணும்
பதிவான செவவல்லி மேனியாகும்
உண்டோர் நோவெல்லாங் கடலேபுக்கும்
உத்தியுத்தி ஞானவழி யதுதானிற்கும்
தொண்டுபடு மென்வசனம் பொய்போகாது
தொல்லுலகில் ரசவாதம் யேவலாமே. (90)

ஏவலாம் மூவனதோர் களங்கைத்தானும்
எடுத்தமே செந்தூரஞ் செய்தால்வேதை
யுவலாங் களமகுசெய்து வெள்ளிதன்னில்
அடவாகக் கொடுத்தாலுஞ் சித்திப்போகும்
காவலாம் வாதம்பொய் யென்றுசொன்ன
கடடருக்கு யிந்நூலைக் காட்டவேண்டாம்
பாகமா யாகோபு சொன்னரிதைப்
பார்த்திடவே சகலமுந்தான் சித்தியாமே (91)

சித்தியாம் பூசைக்திற் சுருக்குவேதை
சிறப்பாகச் செய்யாமல் லேசகந்தனிற்
புத்தியாய் சவுக்காரம் முடிப்பேனென்று
புகலிய பூதனை பெத்தகைகாய்ச்சி
சத்தியாய்ச் சிறுநீரை வீட்டுகாமசி
சஞ்சலமாய்த் திரிவார்கள் ராசியதில்
எதனிசையுஞ் செப்பரிய மூடர்தானும்
இன்பமில்லா தலைந்துமே மாருவாரே (92)

மாளாம லிருக்கவென்று செம்பைமூங்கி
வடிவாக பார்த்திடாற் பலனுமாகும்
கேளாமற் சுடவேண்டாம நூலைப்பார்த்துக்
கெட்டியா யடிதலையைக் கண்டுசேற
பாழாகப் போகாமற பலனுமாமே
பார்த்தணர்ந்து நபிமாரைப் பதிக்கொள்ளு
தேளான பசியடக்குஞ் சொன்னேனம்மா
செகமெச்ச யாகோபு சொன்னவாறே (93)

சொன்னதொரு கருக்கிடையுந் தேர்ந்துபார்த்துச்
சொற்பெரிய கைபாக வரிசைகண்டு
நன்னயமாய்ச் சரக்கினுட நட்புகொண்டு
நாடோறுஞ் சாஸ்திரங்கள் மிகவுமபார்த்து
இன்னிலதிற் பதருமற் செய்துகொண்டால்
இன்பரச வாதம்வரும் யெலலாம்மெய்யே
பின்னும்பின் யாகோபு சொன்னுரிதைதப்
பிரபலமாய்க்கற்றுணர்ந்தாலபெரியோர்தானே (94)

பெரியகபி யென்றசொல்தானுருக்கென்றால்
பேசரிய ரசவாதம் வாதபோகம்
வரியவனுய் மகியையக முற்றேர்க்கிலீ
வழியில்லை தகையில்லை வரவுமில்லை
பெரியவராய்த திரிந்தாலு மொன்றுமில்லைப்
பிசகாமற் கைபாக வரிசைகாணபோர்
சரியவனு யாகோபு சொன்னநீதி
சஞ்சரித்த புத்தியவன் தண்மைதானே. (95)

தண்மையாய் மனத்தனிலே சரக்கையெண்ணி
சத்திசிவ மென்றறிந்து சேர்த்துப்பார்த்தால்
உண்மையாய் வாதம்வரும் யோகமாகும்
உறுதிவரும் பொன்னாகும் வசியஞானம்
வண்மைவரும் பலகலைநூல் தேர்ந்துபார்த்து
வளமாகத் தனக்குமே பதியாம்நன்மை
வெண்மையா யாகோபு சொன்னரித்தை
வெகுபேர்க்கு வாதம்வரும் குணமுமாமே. (96)

குருகேந்திரவங்கு.

குணமாக இன்னமொரு களங்கேளு
குற்றமறச் சொல்லுகிறேன் கூர்ந்துகேளு
பணமாகக் கரைகண்டன் பலமும்பத்து
பதிவாக காரும்பூ பலமும்யேழு
மணமாக ளலுமிச்சம பழச்சார்விட்டு
மாண்டபின்பு வில்லைகட்டிக் கதிரில்வைத்துப்
சுணமான கல்லுப்புச் சுண்ணம்வேறே
சகசாமற் கூட்டென்று கட்டினேனே. (97)

கட்டியிடு புடம்பரிதாய்ப் போட்டெடுக்கக்
கரியாகும் வண்டிலது காலுமிட்டு
தட்டியதை யுருக்கியே பார்க்குமபோது
தக்கசத்து வெள்ளாயாய்த் தானேதோணும்
தொட்டிப்பாய் கல்வைத்துக் கொடியோள்பாதி
தொடர்ந்துபோட் டுக்கன்னி நீராலாட்டி
மட்டமான வில்லைதட்டிப் புடமூன்றிட்டு
மதியாகும் யாகோபு பரிவாய்த்தானே. (98)

அண்டசுண்ணம்.

பரிவாகச் செந்தூர மாகுங்கன்னிப்
பத்தியொடு புறம்பாக வைத்துக்கொண்டுப்
பிரிவாக அண்டோடு பலமும்பத்து
பிசகாமற் சட்டியிட்டு உவர்மண்ணிட்டு
நெரிவாகக் கீழுஞ்சீ ரிடையுமிட்டு
நேத்தியாய்ப் பாணிவிடு யெரிகோர்தானும்
குரியாக அண்டோடு யெண்ணைக்கும்
கூறினார் யாகோபு குணமாய்த்தானே. (99)

குணமாகச் சுத்தஅண்ட ஓட்டைக்கல்வம்
குருக்கிலிட்டு வெண்கருவா லரைத்துவூக
தணமாக நீரிடுங்காண் வீளையஞ்சேரு
தாக்கிட்டு மூன்னீரால் தருகவூட்டி
கணமாக வூதிடவே கடுமையாகும்
கலந்தெடுத்துக் கல்வமிட்டு மூன்னீர்தன்னுல்
உணவாக அரைத்திடயா கோபுசொன்னர்
உறுதியிந்தப் படியரைக்க வொழுங்குமாமே (100)

அரைத்துயெடு குழவிக்குக் கண்டர்மேலே
அதையப்பிக் காயமேவ கதிரில்வைத்து
பரைத்துமே அதுமேலே சீலைசெய்து
பதிவாகப் பெரியபுடம் போட்டுத்தீரு
வரைத்துயெடு வண்டிலிட்டு உருக்கிப்பாரு
வண்மையாய் ரவியாகு மிந்தச்செம்பில்
தரைத்துமே யிச்செம்பில் மூன்செந்தூரம்
தாக்கிட்டு இடைக்கியினந் தகமையாரே. (101)

தகமையாய்ச் செந்தூரந் தன்னைத்தாக்க
தாஷ்டிகமாய்ச் செம்பதுவுங் கட்டிப்போகும்
உகமையார் மதியேழு மூன்சேர்த்தாது
உறுதிதங்க மொன்றுசேர்த் தருக்கிப்பாரு
வகமையாய் மாத்தெட்டுக் காணுநன்றாய்
வகையாகு மிவ்வேஷ்த பருவமில்லே
பகமையில்லே யாகோபு செய்துபார்த்துப்
பகுத்தறிந்து உலகமதிற் பாடினரே. (102)

பாடினதோர் செம்புதனிற் களிம்புபோகப்
பத்திவான கெந்தியினுற் பத்திக்கொள்ளு
கூடினதோர் செம்புள்ளே மாளாவிட்டால்
குணமில்லே யூரல்வரும் கூர்ந்துதள்ளு
தேடினதோர் தேட்டெல்லாம் வீணுய்ப்போகும்
திடமான புடமிறங்கச் சித்தியில்லே
ஊடினதோர் யாகோபு உறுதிசொன்னர்
உற்றவர்தோற்கெல்லாமு மெய்ந்தானே (103)

எய்துமே சத்துக்குத் தருசுவேணும்
இதமான நீத்தினமுந் தருசுவேணும்
எய்துமே களங்குக்குத் தருசுவேணும
எழிலான செந்தூர மினத்துசகெல்லாம்
எய்துமே தருசதவுஞ் சோரவேணும்
வேழைமதி போகாமல் உற்றுப்பாரு
எய்துமே நபிமார்கள் செய்தமார்க்கம்
நீ தணர்ந்த பண்புமிது பாகமாமே. (104)

பாகமாய்ச் சாஸ்திரத்தைப் பாராமூடர்
பதிவான வாதமென்ற சமூத்திரத்தை
வேகமாய் நீந்தியே போகாரப்பா
விதமாக நீந்திற்கை யசரும்பாரு
பாகமது வாராது பலிதமில்லை
பார்த்திடுவான் பணம்போகும் தெரியாதோர்க்குத்
தாகமாய்ச் சொல்லிவிட்டேன் யாகோபென்பேர்
சாதகமா யுபதேசஞ் சாற்றினேமே. (105)

சாற்றினதோர் சரக்குவகை யறியாமூடர்
சரியான பேச்சதறற் பசப்புவார்கள்
போற்றினதோர் பணமதவைச் சம்பாரிக்கப்
பொழுதறக்க மில்லாமற் றிரிவார்பாரு
ஏற்றினதோர் தீபவொளி யறியமாட்டார்
இன்பத்துக் காகமேபொய் சொல்வாரப்பா
தேற்றினதோர் பாணிதனே யறியாமற்றான்
திடமாகச் செப்பிடுவார் சிறியோர்தானே. (106)

சிறியோர்க ளென்றமொழி யாருக்காச்சு
சித்திபெறச் சாஸ்திரங்கள் படிக்காதாலே
பெரியோர்க ளென்றபேரு யாருக்காச்சு
பேணியிந்தச் சாஸ்திரத்தைப் பார்த்ததாலே
அறிவோர்க ளென்றபேரு யாருக்காச்சு
அடங்கியே யுலகமதில் நடந்ததாலே
குறியோர்க ளென்றபேரு யாருக்காச்சு
குருவுக்குப் பிரியமுடன் பணிந்தபேர்க்கே (107)

பணிந்தமே லருளங்கஞ் சொல்லக்கேளு
பதிவான் விதியாளி கண்டுகொள்வான்
அணிந்தமே லண்டவனுஞ் சொன்னநீதி
அதையறிந்து பாகமாய்ச் செய்துகொண்டால்
தணிந்தமே யிங்கிலத்திற் பெரியோனென்று
தொல்லுலகிற் பேரும்பே தாபமாகும்
புணிந்தமே கைபாக வரிசையாகப்
பாரதனிற்சொல்லிவிட்டார்பண்பாய்த்தானே(108
பொன்னிமிலைசேந்தூரம்.

சொல்லிட்ட பொன்னிமிலை பலக்தாஞென்று
சுருதியெலு மிச்சம்பழச் சாற்றுலாட்டி
வெல்லிட்ட திருசாமஞ் சென்றரைத்து
விருப்பமாயத் தங்கமென்ற தகட்டிலப்பு
கொல்லிட்டுத் தங்கமது கருத்துப்போகும்
குணமான தகையெடுத்துக் கல்வமிட்டு
மல்லிவிடுக் கொடியோனைச் சேர்த்தாட்டி
மதித்தமே புடம்போடு வகையாய்த்தானே (109)

வகையாகச் செந்தூர மாகும்பாரு
வடிவாக மதியெட்டு செம்பிரண்டு
தகையாக வொன்றிட்டு உருக்கிப்பாரு
தூக்கிடுங்காண் தங்கத்துக் கதிகவானம்
நகையாகச் சித்தர்வகை யெளிதிற்செய்வார்
நாதாக்க ளாடினதோ ராட்டைத்தானும்
தகையாகச் சொல்லிவிட்டே னிம்மூன்றிற்
றுக்கினேன் யாகோபு தன்மைதானே. (110)

தண்மையாய் மக்காவின் தேசந்தன்னில்
தருகாவில் நபிமார்கள் மெத்தவுண்டு
உண்மையா யவரவர்க்கு வாதமுண்டு
உத்தமோர் பாஷாணம் மிகவுமுண்டு
வண்மையா யதையெடுப்பாற் செய்துகொள்வார்
வகையறிவார் கலிலோஎம் பழுக்கச்செய்வார்
குண்மையா யிருந்தவிடந் தெரியாமற்றான்
குருவாக யிருப்பாரான் கொள்கைதானே. (111)

தானென்ற காவேரித் தாவிலுள்ளோர்
தனியான மலேயினுட பாஷாணத்தை
வானென்ற தறியாமற் பாங்கிலைக்கும்
வைபபான பாஷாணந் தனேவாங்கி
ஊனென்ற தருசுடனே தானுருக்கு
உத்தமமாஞ் சத்துவங்கை தானுஞ்சேர்த்துக்
காணென்ற சாதைத்தான் பிரித்துசெம்பு
கருதியே யெடுத்துமே வேதைதானே. (112)

வேதைதான் பார்த்துமே கடையில்வித்து
விருப்பமாய் ஞானவழி யபப்பாரப்பா
பாதையாய் மிகவிரும்பி மக்காதேசம்
பதிவாகச் செல்லுன்ற தங்கந்தானும்
நீதையாம மாதத்துவும் பனிரண்டாகும்
நேராகுங் காவேரி நாட்டில்வாதம்
சாதையாய்ப் பொன்னதுவு மெட்டேகாலம்
சால்திரத்தைப் பார்த்துமே செய்குவாரே. (113)

பார்த்துமே வைப்பான தருசினுலே
பதிவாக நீத்தியே சூதங்கட்டி
காத்துமே வளர்ந்தாற்போல் செய்குவார்பார்
நலமாக மக்காவின் தேசந்தன்னிற்
காந்துமே மலேதனிலே விளையும்நல்ல
கனமான தருசுலவை நீற்றிச்செய்வார்
கோத்துமே அண்டரண்டந் தங்கவேண்டிக்
குத்தமற விருப்பார்கள் கொள்ளேதானே. (114)

கொள்ளேயாம் மண்ணேடு மரங்களெல்லாம்
குணமாகத் தொட்டவுடன் பழுத்துப்போகும்
பிள்ளேயாங் காவேரி தன்னில்வாதம்
பிரியமாய் வெள்ளிரவி தானுருக்கித்
துள்ளவே யதிற்கொடுத்துச் செட்டிகையில்
துணிகரமாய் விற்பனைகள் செய்வார்பாரு
வெள்ளேயா யாகோபு சொன்னநீதி
வேதாந்தி கண்டுமிக விரும்புவாரே. (115)

விரும்புவா குலகத்திற் கருமிதானும்
விருப்பமாய்ச் செய்வாகள விட்டுப்போட்டு
திரும்புவார் ஏருழுவார் பிரட்சைசெய்வார்
திட்டமா யாபாரம் மிகவுஞ் செய்வார்
அரும்புவார் வட்டிக்குக் கொடுத்துநாளே
அடவாகப் போக்கிப் கிரிவாரப்பர
நரும்பூவுங் கண்டரவி சோதுச்சதது
நலமாகச் செம்பெடுக்க மாட்டார்தானே. (116)

தங்கச்செம்பு

மாட்டவே யின்னமொரு களங்குகேளு
மார்க்கதைக் கண்டறிந்த வாங்குத்தான்
மூட்டவே கண்டருடன் சதிசேர்த்து
மூட்டியறை பாணியினும் பின்புமூன்று
ஆட்டவே சாமமது வில்லைகட்டி
ஆதிரம தாகவோர் புடதைப்போடு
நாட்டவே கரியாகு மென்றுசொன்னர்
நலமாக வெடுத்தபின்பு நாட்டங்கேளே. (117)

நாட்டமென்ன கொடியோணப் பாதிசேர்த்து
நலமாகத் தானரைக்கப் பழச்சாற்றுலே
வாட்டமென்ன வில்லைகட்டிக் கதிரில்வைத்து
வடிவாகப் புடம்போட்டு வெடுத்துப்பாரு
பாட்டமென்ன கரியதுவுஞ் சிவந்துபோகும்
பதிவாகச் சிவப்பதுவை யெடுத்துகொண்டு
கூட்டமென்ன யேமமதை யுருக்கிமேலே
குணமாகச் செந்தூரங் கொடுத்திடாயே. (118)

கொடுத்திடவே தங்கமது செம்புமாகும்
கூகுரல்நீ போடாமற் கெந்திவீரம்
ஆடுத்திடவே மடங்கையுமே கூடச்சேர்த்து
அரைப்பங்கு பூசியே புடதைப்போட்டு
தடுத்திடவே கொருவகுமது கரிபோலாகும்
தன்மையாய்க் கொடியோணம் பாதிசேர்த்து
ஆடுத்திடவே பழச்சாற்றி லரைத்துவில்லை
அடவாகச் செய்திடுவாய் அனந்தம்போக்கே. (119)

அனந்தமென்ன செந்தூர மாகும்பாரு
ஆதியாய் மதிதனிலேக் யெட்டுகொன்று
கனந்தமாய்க் கொடுத்துருக்கிப் பார்க்கும்போது
காரணமா யெடடரைதான் காணும்பாரு
தனந்துமே பணவிடைதான் பாலிலுண்டு
சதாகோடி காலமெல்லா மிருப்பார்கண்டீர்
வனந்தனிலே சருகரித்துக் காலந்தள்ளு
வடிவான யாகோபு வகைசொன்னாரே. (120)

சொன்னயமா மிந்தமுந் நூறுதன்னிற்
சொல்லரிய வாதவருங் கண்டுதேறு
நன்னயமா யிகபரந்தா னிரண்டுமூன்று
நாதாந்த சாரமுடன காயசித்தி
வின்னமில்லா மற்றுனே வந்துகூடும்
விருதாவாய்ச் சாஸ்திரத்தை யறியாமூடர்
இன்னிலத்தி லவன்பேச்சுக் கேட்டுச்சுட்டு
யிதமாக மாயையதி லழுந்துவாரே. (121)

கல்லுப்பு வெங்காரக்கட்டு.

அழுந்தாமல் வண்டிலது பலமும்பத்து
அடவாகக் கட்டியா யெடுத்துக்கொண்டு
தழுந்தாமற் கடல்நுறையை வுதறீரும்
தாக்கியே அதின்பேரிற் பெரியதாய்க்கட்டி
வழுந்தவே உப்பதுவும் பலமும்பத்து
வகையாக உருக்கியே அதனினுள்ளே.
கழுந்தவே அழுத்தியே பிடிக்கவென்று
கருணைவைத்து யாகோபு கருதினாரே. (122)

கருதினா ருப்பதுவுங் கசிவுமத்து
காரியில்நின்று ஆடுமது கனகமாக
உறுதியாய்க் குகையிலிட்டு உருக்கும்போது
உணவாக நாலுக்கு ஒன்றுதங்கம்
அறுதியாய்த் தங்கமிடை நாகம்போட்டு
அன்பாகக் களங்காகும் நாற்றுக்கொன்று
பருதியாய் ரவிபழுசகும் நேர்மையாகும்
பகுத்தறிந்து யாகோபு சொன்னர்தானே. (123)

சொன்னதோ ருப்பைமுந்திக் கட்டப்பாரு
சூட்சமாய் வாதமது யேவல்செய்யும்
நன்னயமா யுப்பைப்போ லொன்றுமில்லை
நாட்டிலே சொல்லாதே நலமதாகும்
இன்னிலத்திற் கல்லுப்பில் நிரம்பவேதை
இனிதான சிவசொத்து யெய்தும்பாரு
கன்னல்போ லிருக்குமந்தக் கல்லுப்புத்தான
காட்டினார் யாகோபு கண்டார்தானே. (124)

கண்டார்கள் சாஸ்திரத்தின் முறைபாடெல்லாம்
கனிவாகக் காணுதார் மூட்டாப்பேய்கள்
தொண்டாகப் படித்தவரைத் தொண்டுசெய்வார்
சுருதிதனை யூகாய்ந்தோர் சொல்லமாட்டார்
கண்டாலும் பேசார்க ளின்னங்கேளு
கனிவாகப் படியாதார் மிகவேசொல்வார்
பண்டுபழங் கதைசொல்வார் நம்பவேண்டாம்
பார்தனிலே செய்தாக்கால் பலனுமாமே. (125)

பலனுகச் சொல்லுகிறேன் சாஸ்திரத்தைப்
பதிவாகப் படித்தாக்காற் பத்தியாகும்
பெலமான செம்பாகும் செம்புதன்னைப்
பேத்திட்டுத் தங்கமதைச் சேர்த்துநீயும்
வலமாக நாரும்பூ போட்டுக்கொள்ளு
வடிவாக யெழுப்பிடவே வர்ணமெல்லாம்
கலனில்லாத் தங்கமாம் பெரியோர்சொன்னார்
காதலா யாகோபு கருதினாரே. (126)

வேடியுப்புத் திராவகம்.

கருதியே யின்னமோ ருப்புச்சுண்ணம்
கனிவாக வேதையாங் கண்டுபாரு
வருதியே வடமதுவும் பலமும்பத்து
வகையான வளையமது இருபத்தஞ்சு
பருதியே கல்லுரலி லிடித்துப்போடு
பதிவான வாலியென்ற சட்டிமூடி
சுருதியே முன்னீரைத் தள்ளிப்போடு
சுத்தமாங் கடைநீரைப் பிடித்துக்கொள்ளே. (127)

பிடித்துமே சேரிரண்டு அதிலேதானும்
பெலமான சூகமது பலமுங்காலாம்
வடித்துமே அதிலிட்டு ரவியில்வைக்க
வாதாகக் கரைந்துமே புகைநீரோடே
சூடித்துமே நீராகும் நீரைத்தானும்
குணமாக வைத்துமே குருக்குவேகை
கூடித்துமே யாகோபு சொன்னேனப்பாரு
தூணபான திந்நூலைத் தோய்ந்துதேறே. (128)

தோய்ந்துபார் கருவேது வென்றுற்றீகளு
தொல்லுலகிற் பாகமதைக் கண்டுகொள்ள
ஆய்ந்துபார் சாக்குஅது பத்திஞலும்
ஆடவாக வட்டிக்கு வைத்தாப்போலே
சாய்ந்துமே கட்டாதும் மெழுதுமாகும்
சரியானசெந்தூர மிதிலேயாகும்
பாய்ந்துமே யாகோபு கண்டநீதி
பகுத்தறிந்துபார்த்தவர்க்குப்பதஞ்சொன்னேனே

பதமாம்பர ஷாணமுப் பத்திரண்டு
பலமாகச் சுத்திசெய்து புகைநீர்தன்னில்
அதமாகச் சுருக்கிடவே வெல்லாங்கட்டும்
ஆதியாஞ் சூகமுதல் வெள்ளைதானும்
விதமாகக் கட்டியே வேதையாகும்
வித்தகமாய்த் தொட்டதெல்லாஞ் சித்தியாகும்
சதமாக யாகோபு சொன்னநீதி
சத்தியமாய்ச் சொல்லுகிறேன் தாக்கிப்பாரே (130)

தாக்கிப்பார் லிங்சுமுதல் வெள்ளைதானுந்
தடையறவே குகிரைப்பல் சூகந்தானும்
வாக்கிப்பார் செம்பினுட சொட்டியோடு
வகையான கரிமோட்டில் உள்திகல்லாய்
பாக்கியமாய்ச் சுருக்கிடவே கட்டிப்போகும்
பதிவான கரியில்நின்று ஆடிநிற்கும்
தாக்கியே நவலோகந் தன்னில்வேதை
தப்பாமல் வாதிசெய்யுந் தொழிலுமாமே (131)

தொழிலாகத் திராவகத்தை வைத்துக்கொண்டு
தானேபாகச் சரக்கையெல்லாந் துடிபாய்க்கட்டும்
செழிப்பாக வுலகத்தி லிருந்துபாரு
சேதியெல்லாங் கேட்டுமே செவியில்வாங்கு
பழிப்பாக வொருவரையும் பழிக்கவேண்டாம்
பழித்தாக்கா னுண்ணியவன் கொல்வான்பாரு
தெளிப்பாயும் வழியறிந்த நூலேச்சொன்னார்
சூட்டினவர் பதினெட்டுச் சித்தர்தாமே. (132)

சித்தராய்ப் போகவென்றூற் புனைநீர்தன்னை
சீர்பெறவே தான்வைத்துத் துணையாய்க்கொள்ளு
பத்தரா யிருக்கவென்றூற் குருவின்பாதம்
பத்தியே யவர்பாதம் பத்திக்கொள்ளு
முத்தரா யிருக்கவென்றுல் மூலம்பாரு
முத்திபெறக் கேசரியை முயன்றுபாரு
வித்தகராய்ப் போவென்றூற் சுயத்தைப்பாரு
விருதாவைப் பாராதே முத்திபாரே. (133)

பாரேநீ கைபாகம் வந்துதென்றூற்
பதிவான ரசவாதம் பாரிலோர்க்கு
ஏரேநீ கட்டியதை யுழுதால்நன்மை
ஏரில்லா னடித்தடித்த கதைபோற்சொல்வார்
வாரேநீ குளிகைக்குப் போட்டிருக்கில்
வகையாக நடத்தைசெய்தால் வகையாம்பாரு
தாரேநீ யாகோபு சொன்னநீதி
சஞ்சலமாய்க் கேட்டாக்கால் சரிவராதே. (134)

சரிவரா தொருபொருளே நம்பவேண்டாம்
சரியான வாதமது நம்பித்தேறு
பரிவாரப் படிப்பைத்தான் நம்பினுக்கால்
பதினாலு லோகமெல்லாம் ஆளுவாய்நீ
கரிபோலே யிருந்திடுவீர் தேசந்தன்னிற்
கருத்ததுவைக் கைபிடித்து வாழலாகும்
பிரியமா யிருந்தாலே புத்திவேணும்
பிரட்டில்லே யாகோபு பேசினேனே. (135)

பேசியே சிறிதுபேர் வாதஞ்செய்வார்
பிறட்டியே பணங்களைத்தான் வாங்கிக்கொண்டு
ஆசியே ஓடியே போவாரப்பா
அசடர்கள்தான் செய்திடுவா ரிந்தவித்தை
பாசிதனிற் பழங்கல்லு யெறிந்தாற்போலப்
பதிவாக விலகியே வந்துகூடும்
ஏசியே திரிவார்கள் பாவிமாகள்
இதமான யாகோபு யிதஞ்சொன்னேனே. (136)

இதமான புதிமன மாங்காரந்தான்
இன்பமா யிவ்விடத்திற் புத்திகேட்டு
அதமான படியில்லா மனிதர்சொல்லை
அழிம்பாகக் கேட்டுமே அநேகஞ்சுட்டு
விதமான கதைகார ணங்கள்பேசி
வெகுகோடி பணமெல்லாஞ் சூட்டுக்கெட்டார்
குதமாகச் சொல்லிடுவார் நம்பவேண்டாம்
குறியான யாகோபு குறிசொன்னேனே. (137)

சவுக்காரச்சுண்ணம்.

சொன்னதொரு சவுக்காரச் சுண்ணங்கேளு
சொற்பெரிய குத்துக்கல் தனனிவாங்கு
பன்னதொரு சேர்நாலு நிறுத்துக்கொண்டு
பக்குவமாய்க் கற்சட்டி தன்னிலிட்டு
நன்னயமாய்ப் பாணியது சேருயெட்டு
நலமாகச் சுக்கநீர் சேருநாலு
பின்னமில் லாமலேதான் கலக்கிமூன்று
பிறபலமாய் வடிகட்டிக் காச்சிடாயே. (138)

காச்சிடவே அடியில்நின்று உறைத்துஉப்பைக்
கணக்காக யிருந்திடுங்காண் அதைவழித்துப்
பாச்சிடவே குழிக்கல்வந் தன்னிலிட்டு
பக்குவமா யரைத்துவில்லை காயவைத்து
வாச்சிடவே புடம்போட்டு யெடுத்துப்பாரு
வகையாகத் தந்தம்போ லுப்புமாகும்
நீச்சிடவே யிந்தஉப்புக் காரமாச்சு
நிலையான உப்பினுட பெருமைகேளே. (139)

பெருமையா யுப்பதுவும் பலம்நிறுத்துப்
பிங்காணுங் கல்வத்தில் மிகவேவைத்து
அருமையா பரைத்துமூன் தருசுக்கிட்டு
அடவாகக் காடையென்ற புடத்தில்நீறும்
கருமையாத் தருசுநீர் தன்னுற்கேளு
கடமான உபரசங்க ளெல்லாம்நீறும்
வருமையா யித்தருசு தன்னில்யார்க்கும்
வகையான குளிகைகட்டி வாழ்ந்தார்தாமே. (140)

வாழ்ந்திடவே நீலனதுநீ றவேணும்
வரகான காயசித்தி வாதசித்தி
தாழ்ந்திடவே போகாமற் சுண்ணந்தன்னைத்
தாட்டிகமாய் வைத்துமே யிரதங்கூட்டி
வீழ்ந்திடவே உபரசங்கள் சத்தையூட்டி
விருப்பமாய் முனிசித்தர் வாதம்பார்த்தார்
ஆழ்ந்திடவே கெவுனத்தி லிருப்பாரப்பா
அடவான யாகோபு அறைந்திட்டாரே. (141)

அறைந்திட்ட சவுக்காரச் சுண்ணம்பொய்யோ
அன்பான குளிகைபொய்யோ அருளால்நோக்கி
பறைந்திட்ட தருசினுட சுண்ணம்பொய்யோ
பாதையதில் நிரம்பவுண்டு பிரிவுமெத்த
உறைந்திட்ட செம்பதுவை யெடுத்தோர்பொய்யோ
உண்மையாய் கடவதார்க் கெல்லாம்பொய்யோ
குறைந்திட்ட வாதங்கள் பார்த்துநானும்
கூறினேன் யாகோபு குணமாய்த்தானே. (142

குணமாக சித்தர்கள் பெருமைதன்னைக்
கூறினேன் முன்நூறிற் குணமதாக
மணமாக அவரவர்கள் செய்யுமார்க்கம்
வகைசொன்னேன்மயக்கமெல்லாந்தீரச்சொன்னேன்
தனமாக யெப்பொருளுந் தேர்ந்துபார்த்து
தாட்டிகமாய் ஒருவேலை செய்துகொண்டால்
கணமாக யெல்லாமே சித்தியாகும்
கருத்துணர்ந்து யாகோபு கருதினாரே. (143)

வங்கச்சேந்தூரம்

கருதினேன் கருநாக வித்தைதன்னைக்
காட்டுகிறேன் யிதுலெகுவு முன்னேபாரு
வருதினேன் காரீயம் பலமும்பத்து
வகையாகக் குமரிச்சா ரதிலுருக்கி
உருதியா யிருபத்து ஒன்றுதானும்
உததுமேசய்ததபின்பு சொல்லக்கேளு
தருதியா யாகோபு வங்கந்தன்னைத்
தாஷ்டிகமா யுலகதனிற் சொன்னவாறே. (144)

சொன்னதொரு வடமதுவும் பலமும்பத்து
சொற்பெரிய வலேயமது ஐயைந்தாகும்
கன்னயமா யிரண்டுமொன்று யிடிக்கத்தூளாம்
நாடியே வாலியிட்டு அடுப்பிலேற்றி
கன்னல்போ லெரிக்கவே புகைநீர்வந்து
கணக்காக முன்னீரைக் கருதித்தள்ளி
இன்னிலத்திற் கடைநீரைப் பிடித்துக்கொள்ளு
இன்பமுற்ற யாகோபு இதஞ்சொன்னரே. (145)

இதமாக முன்வங்கந் தன்னிலிட்டு
இன்பமா யிழுத்தரைத்து வில்லேதட்டி
அதமாகக் கதிரில்வைத்துப் புடமும்போட்டு
அன்பாக வெடுத்திடவே சிவந்துநிற்கும்
குதமாக மாண்டுதடா வங்கந்தானும்
குற்றமறும் வெடுத்துநீ கூறக்கேளு
விதமாக யாகோபு சொன்னநீதி
விருப்பமாய்க் கைபாகவரிசைபாரே. (146)

வரிசையாய்த் தாளகமும் பலமும்பத்து
வைத்துயெரி கண்ணத்தில் இருசாமந்தான்
புரிசையாய்ச் சிவந்துநிற்கும் வெடுதுக்கொண்டு
போககோடே முனவந்த செந்தூரதில்
பரிசையாய் நாலிலொன்று சேர்த்துக்கொண்டு
பதிவாகப் புகைநீரா லாட்டிக்கொண்டு
கரிசையாய் வில்லேகட்டி யாகோபுந்தான்
கனிந்துமே புடம்போடச் சொன்னவாறே: (147)

புடம்போட்டு மெடுத்திடவே செந்தூரிக்கும்
புகலரிய செந்தூரம் நூற்றுக்கொன்று
தடமபோட்டு ரஸயுருக்கி யதிலேதாக்கு
தாட்டிகமாய் ரவிபழுத்த தன்மைகேளு
கடம்போடி கைவரிசை யாகச்செய்து
கருத்தாலே பாகமெல்லாங் கண்டுகொள்ளு
விடம்போலப் புத்திவர வேணும்பாரு
வேதாந்த யாகோபும் விளம்பினாரே. (148)

விளம்பினார் குருமுனியும் மானிடர்க்கு
விருப்பமாய்ப் புத்திசொன்னார் வாதஞ்சொன்னார்
தளம்பினரிதையறிந்த பெரியோர்தானும்
தாட்டிகமாய்ச் செய்வார்கள் தடையேயில்லை
குளம்பியே எண்ணமுற்றுத் திரியவேண்டாம்
கூக்குரலாய்ச் செய்யாதே கோடிபாவம்
தளம்பியே சொல்வார்கள் புத்தியுள்ளோர்
தப்பறவா யறிந்தயா கோபுதானே. (149)

தானென்ற செந்தூரம் பணமவ்வீதம்
தாட்டிகமாய் மண்டலந்தா னுண்டுதேறு
வானென்ற நரைதிரைக ளற்றுப்போகும்
வலுவாகும் வங்கத்துக் குறுதிமெத்த
கானென்ற கைப்போடு புளிப்புத்தள்ளு
காரியமாய்ப் பார்த்துநீ கருதிவைக்க
வேனென்ற யாகோபு சொன்னரித்தை
இதமான புத்தியுள்ளோர் அறிந்தவாறே. (150)

காரீயச்செம்பு.

அறிந்திடவே காரீயச் செம்புகேளு
அடவாகக் காரீயம் பலமும்நாலு
குறிந்திடவே ரவியதுவும் பலமும்நாலு
கூட்டியே உருக்கிமெள்ளக் குமரிப்பாலில்
பறிந்திடவே உருக்கிச்சாய் சுத்தியாகும்
பதிவாக மெடுத்துமே குகையிலிட்டு
வறிந்தி யுருக்கென்றுயா கோபுசொன்னார்
வண்மையிது நிசமாகும் வழுத்திடாயே. (151)

வழுத்திடவே தேவியது பலமும்பத்து
வகையான அரசனது பலமும்பத்து
தழுத்திடவே யிரண்டுஞ்செங் கீரைச்சாறு
தன்னைவிட்டு அரைத்துமே குன்றிபோல
உழுத்திடவே காபலைத்து முன்னேதானும்
உகந்துநின்று வங்கத்திற் கிராசம்போடக்
கழுத்தியே வாங்கியது கரியுமாகும்
காட்டினர் யாகோபு கணக்காய்த்தானே. (152)

கணக்காக வெடுத்துமே கல்வத்திட்டு
கண்டஅரை பாதிசேர் கொடியோன்றன்னை
பிணக்காக அரைத்துவில்லை கதிரில்வைத்து
பின்புதான் புடம்போடக் கக்குஞ்செம்பு
இணக்காக உருக்கிடவே ரவியுமாகும்
இன்பமாய் ரவியெடுத்து உருக்கிக்கொண்டு
வணங்காகத் தங்கமதை யிடையேசேரு
வளமைசொன்னர்யாகோபுபலமாய்த்தானே. (153)

பலனுக யிதைவைத்துப் பிழைத்துக்கொள்ளு
பக்குவமாய்ப் பின்னேதான் பண்டிதத்தைப்
புலனுகப் பார்த்துக்கோ அறிந்துகன்றாய்
புகழாதி யுலகத்தி லிருந்துகொள்ளு
பெலனுக ஒருவருடன் பேசவேண்டாம்
பேசினுப் பிழைவருங்காண் மனமகற்றும்
வலனுகப் பாராதே மவுனம்பாரு
வழுத்தினர் யாகோபு வரிசைதானே. (154)

வரிசையா யுருக்கியே தகடடித்து
வண்மைபெறச் சத்திசிவ மதிலேபூசு
உரிசையாய்ப் புடம்காலு போட்டுத்தீரு
உத்துமே செந்தூரம் முருக்கம்பூப்போற்
கரிசையா யிருந்துவிடும் மதியிலிட்டுக்
கருவாகலன்றிட்டு உருக்கிப்பாரு
பரிசையா யேமமது பத்துமாகும்
பார்த்தறிந்து கருத்தோடு பலன்சொன்னசே. (155)

கருத்திலே மெய்யாக வாதந்தன்னைக்
கண்டுபெடு பெடுத்தபின்பு கருத்திற்கொள்ளு
உருத்தாக ஏழைபோ லிருந்துவாழு
உத்தமோ ருறவாகும் உறுதியாகும்
பெருத்தாக அலையாதே பின்புகேளு
பெரியோராய்ச் சமாதானிற் புக்கலாகும்
வருத்தாமற் றிரியலாம் வாழ்வுண்டாகும்
வையகத்தில் யாகோபு வகைசொன்னாரே. (156)

வகையான ரசவாதம் எளிதோ அல்ல
வந்திட்டாற் குபேரனவன் வாராவிட்டால்
மிகையான மிடியனென்று சொல்லுவார்கள்
மென்மேலும் பழிப்பார்கள் தோழியப்பா
பகையாகப் பேசிடுவார் உலகமாடு
பார்க்கறியா நிர்மூடர் பழிகாரர்தான்
திகையாகத் திகைப்பார்கள் உலகவாதி
தேத்தினர் யாகோபு திறமைதானே. (157)

திறமான பொருளறிய வேணுமென்றால்
திட்டமா யிந்நூலோ டெந்நூலெல்லாம்
நிறமாகும் அடிதலையும் நுனியுமட்டும்
நீயாய்ந்து பேறியே வழியைப்பாரு
குறமான குணமெல்லாங் கோடிவித்தை
குபேரனைப்போ லாவானுங் குறித்தசிந்தை
துறவாகு மிந்தமூன்று ததனைப்பாரு
துப்பறவா யாகோபு துலங்கச்சொன்னார். (158)

வெள்ளிக்களங்கு

சொன்னதோர் களங்குவகை யின்னங்கேளு
சுத்தமுள்ள வெள்ளியது பத்துதன்னை
நன்னயமா யுருக்கிரண்டு செம்புசேர்த்து
நலமாக உருக்கியபின் நாட்டக்கேளு
கன்னலாய்த் தகட்டித்துப்பின்புதானும்
காரணமாய்ச் சத்திரசு பற்பஞ்சேர்த்து
இன்னிலத்திற் பழச்சாறு சாமமாட்ட
இதமாக யாகோபு சொன்னதாமே. (159)

சொன்னதொரு பழச்சாறு விட்டரைத்துச்
செழிமைபெற நொருங்குமட்டும் புடமுமிட்டு
கன்னயமாய்ப் பார்த்தவுடன் கரிபோற்காணும்
நயமான கரிக்கிருகர் கொடியோனேத்தான்
பன்னகமாய்ச் சேர்த்து அரை முன்சாற்றுலே
பதியரை புடம்போடச் சிவப்புமாகும்
இன்னிலத்தில் யாகோபு சொன்னநேர்மை
இதமாகச் சொல்லிவிட்டே னின்னங்கேளே.(160)

இதமாக வண்டிலதுக் கொஞ்சமிட்டு
இன்பமூட னேயுருக்கப் பொன்னுய்நிற்கும்
பதமாக பேமமது ஒன்றுயிட்டு
பத்தியமா யுருக்கிடவே தங்கமாகும்
மதமான தங்கத்தை வித்துரீயும்
மானிலத்திற் செலவுமே செய்துகொண்டு
நிதமான ஞானத்தைப் பார்த்துத்தேறு
நிர்ணயமா யாகோபு செப்பினாரே. (161)

செப்பினதோ ரப்புடப்பும் நோய்க்கூட்டிச்
செயலான தங்கமதாய் நிலைத்துநின்று
ஒப்பினதோர் பெண்ணுணுஞ் சேர்ந்துதானும்
ஓவியமா யுருவாச்சவ் வுண்மைபோல
நப்பினதோர் ரசவாத மிதுவேயாகும்
ஞானிலத்தில் வாதமிதை காட்டிப்பாரு
தப்பிதம்போ காதயா கோபுசொன்னார்
தாஷ்டிகமாய் வரிசையுடன் தனித்துப்பாரே.(162)

வரிசைபார் அயச்செம்பு கெந்திச்செம்பு
வலுவாக வைத்துமே பிழைத்துத்தேறு
உரிசைபார் ரசகுளிகை பின்னேபாரு
உத்துமே பொருளெல்லாம் வந்துகூடும்
பிரிசையா யிந்நூலே யுடைத்துப்பாரு
பிரபலமாய்க் காயசித்தி பண்ணிக்கொண்டு
வரிசைபார் மார்க்கத்தின் வழியேசெல்ல
வகையான தொழிலெல்லாம் மார்க்கமாமே. (163)

மார்க்கமாய் மக்காவின் தேசந்தன்னில்
வழியோடே சென்றறிந்து வாதந்தன்னை
ஏர்க்கவே நானுணர்ந்து பித்தேசத்தில்
எளிதாக வைத்தியமும் தெளிவாய்ச்சொன்னேன்
காக்கவே கைபாக வரிசைகண்டு
காரியமாய்ச் செய்தாக்கா லுறுதியாகும்
ஊக்கமா யாகோபு சொன்னநீதி
உற்றுணர்ந்து பார்த்தாக்காற் சித்தியாமே. (164)

சித்தியது வேணுமென்றூற் களங்குபாரு
சிறப்பாகப் பலனுகும் சிறியோர்க்கெல்லாம்
புத்தியா யிருக்கவென்றூற் கெந்திச்செம்பைப்
பிரியமுடன் பார்த்துமே புசழ்ந்துநீயும்
நத்தியே வித்துநீ செலவுசெய்து
கன்னியமாய்ப் பல்லோர்க்குச் சொரூபங்காட்டு
மூத்தியரம் யாகோபு மொழிந்தாரித்தை
மூவுலகும் மெச்சுமித முனிந்துகாணே. (165)

முனிந்துபார் முக்கியமாய் நூலைப்பாரு
முற்றுணர்ந்த யோகசித்தர் மொழிதப்பாது
தனிந்துமே பொருளாகும் நீதியாகும்
சரியான பொருளறிந்தால் வாதியாகும்
கனிந்துமே முக்காலுங் கண்டுபாரு
கணக்காக வொன்றுவரும் கருத்திற்றங்கம்
பினிந்துபார் ரசவாதம் யேவல்கேட்கும்
பிரபலமா யாகோபு பேசினாரே. (166)

அயக்களங்கு.

பேசிடவே யின்னமொரு செம்புசேரு
பிரபலமாய்ச் சொல்லுகிறேன் பெருமையாக
வாசிடவே அரைபொடியோ பலமும்பத்து
வகையாகப் பழச்சாற்றி லூறவைத்து
மூசிடவே மூன்றுநா ளூறவைத்து
முக்கியமா யெடுத்துப்பின் மூர்க்கங்கேளு
ஆசிலேய அரைபொடிக்கி நீலன்பத்து
அடைவாக யாகோபு அறைத்ததாமே. (167)

அரைத்திடவே செந்தியது பலமும்பத்து
அடைவான வீரமது காலுமிட்டு
அரைத்திடவே எலுமிச்சம் பழச்சாற்றிலே
அரைத்துமே வண்மையாய் வில்லைகட்டி
கரைத்திடவே கதிரில்வைத்து வில்லைமேலே
கனிந்துமே கண்ணும்பு உப்புநேரே
உரைத்துமே அரைத்துமெள்ளக் கவசங்கட்ட
உற்றுணர்ந்து யாகோபு உரைத்தார்தானே. (168)

உரைத்தமொழி நிசமாகும் உண்மைமெத்த
உறுதியா யெடுத்துநீ யுணர்வாய்தானும்
பரைத்திடவே புதுக்குகையி லிட்டுருக்கப்
பளிச்சென்று சத்தாகும் வெள்ளிபோலே
கரைத்திடவே சத்தில்நிற்கும் எண்ணெய்வாங்கக்
கனிவாக யெழுநூற்றிற் கருதிச்சொன்னேன்
வரைத்ததிந்த நூலிரண்டும் ஓத்துப்பார்த்து
வகையாக யாகோபு வழுத்தினாரே. (169)

வழுத்திடவே சத்துநின்ற நிறைக்குப்பாதி
வகையாக மாடுனைத்தான் பாதிசேர்த்து
தழுத்திடவே அரைத்திட்டு முன்னீராலே
தாக்கில்லை கதிரில்வைத்துப் பின்புகேளு
உழுத்திடவே பெரியபுடம் போட்டெடுக்க
உறுதியாம் செகப்புமெத்தச் செம்புமாகும்
பழுத்திடுமே லோகமுதல் எல்லாம்நீறும்
பாதையிது யாகோபு பயின்றார்தானே. (170)

தானென்ற செம்பெடுத்து உருக்கும்போது
தலமாக நாலிலொன்று தங்கஞ்சேரு
கானென்ற தங்கனிடை நாகஞ்சேரு
கருத்தாக நாகமிடை யீயஞ்சேரு
பானென்று உருக்கியே புட்டாய்ப்பண்ணி
பதிவாக உருக்கியதோ நிடைக்குப்பாதி
நானென்ற நாத்தமது சேர்த்துநீயும்
நலமான யாகோபு அரையென்றாரே. (171

அரைக்கயிலே சிவன்வீர்த்து இடையேசேரு
அன்பாகப் பொற்றலையின் சாற்றினுலே
பரைக்கயிலே பெரியபுடம் போட்டுவாங்கு
பதிவாகக் கருத்ததுவும் பாரிற்றேணும்
உரைக்கயிலே கொடியோனைக் கூடச்சேர்த்து
உறுதியா யரைத்துவில்லை காயவைத்துக்
குறைக்கவே புடம்போடச் செம்புமாகும்
குற்றமில்லை யாகோபு சொன்னவாறே. (172)

சொன்னதொரு செந்தூரம் சுவலோகத்திற்
சுருதிமுறை நூற்றுக்கொன் றிட்டாயானுல்
கன்னமாய் மாத்தென்ன பத்துமாகும்
நான்கண்ட படிசொன்னேன் நயந்துபாரு
இன்னிலத்தில் ரசவாதி நூலில்லாது
இதமாக வாதத்தை மிகவேசுட்டு
உன்னிக்கெட் டேனென்று சொல்லுவார்கள்
உற்றுணர்ந்த யாகோபு மொழிகள்தானே. (173)

மொழிகள்தான் செந்தூரம் பணமவ்வீதம்
முடிவான நோய்தனக்கு உடனேயிய
அழிவான நோய்களெல்லாம் அகன்றுபோகும்
ஆகியாம் உலகத்தோர் பிழைக்கவென்று
சுழிவாக வெல்லார்க்குஞ் சொன்னநீதி
தோய்ந்திவான் புத்தியுன்னிச்சொல்வேண்யானும்
கழிவான அழிம்புள்ளோர்க் கில்லையில்லை
கருதினர் யாகோபு கருணைதானே (174)

கருணையாய் மக்காவின் தேசந்தன்னிற்
காரியமாய்க் குளிகையிட்டு நகரிற்சென்றேன்
அருணையாய் நான்போகும் வேளைதன்னில்
அடைவாக வேதமது மூன்றுமாகும்
தருணையாஞ் சிறிதுகாள் சென்றபின்பு
தடையற்ற முகம்மதுவும் வந்துகூடிப்
பருணையாம் வேதங்கள் கூட்டச்சொன்னர்
பதிவாகக் கண்டியாகோபு சொன்னேன். (175)

சொன்னதொரு மூன்றறிற் போக்குமெத்தச்
சொல்லரிய எழுநூற்றில் வாதமெத்த
நன்னயமா யிவ்விரண்டும் ஒத்துப்பார்த்து
நல்லபஞ்ச மித்திரமும் மூன்றுமோடு
இன்னதொரு கைபாக வரிசைபாரு
எடுத்துமே செய்திட்டால் பலனுமாகும்
கன்னல்போற் கற்றுணர்ந்த பெரியோர்தண்ணிக்
காத்தாக்கால் எல்லாமுங் கருதிப்பாரே. (176)

கருதியே வடமொழியைப் பார்த்துத்தேறு
கனிவாக நால்வேத மாறுசாத்ரம்
சுருதியெலாம் பார்த்துணர்ந்த யாகோபென்பேர்
சுகுணமுள்ள பெரியோர்க ளாடுமோட்டை
பருதிமதி யுலகத்திற் சொன்னேனப்பா
பார்த்துணர்ந்து அறிந்துமே பகுத்துப்பார்த்து
வருதியா பட்டவனே கொண்டுபானும்
வகையறிந்து யாகோபு வழுத்தினேனே. (177)

வழுத்தினேன் களங்குமுதற் செந்தூரங்கள்
வகையான பற்பமுதல் லேகியங்கள்
தழுத்திடவே செம்பெடுக்கும் மார்க்கமோடு
தடையறவே உலகத்திற் சொன்னேனப்பா
இழுத்திடவே செய்பாக மீய்ந்திட்டாக்கால்
இணையில்லாப் பொய்யாகும் யிதமாம்பாரு
கொழுத்தநதி போலேநீ திரியாதென்றூர்
கொட்டினூர் யாகோபு குணமதாமே. (178)

குணமாகக் காயசித்தி யோகசித்தி
கூறுமெழு நூறுமூன் நூறுதன்னிற்
பணமாகப் பொருளெல்லாம் பகுத்துச்சொன்னேன்
பாதையிதில் வெகுபேர்க்குப் பரிந்துபாரு
உணவாகச் செய்தாக்கா லெல்லாமாகும்
உற்றுணர்ந்தால் உறுதியாம் உலகத்தோர்க்கு
கணமாகப் பொருளெல்லாஞ் சோதித்தாக்கால்
கருமமது யில்லையப்பா கருதிப்பாரே. (179)

கருதியே கருசினுட சுண்ணந்தன்னைக்
காட்டினேன் எழுநூறிற் கிருபைவைத்து
பருதியே முந்நூறிற் சொல்லிப்போட்டேன்
பலனுது மென்வசனம் பொய்போகாது
உறுதியாய்ப் பார்த்துமே செய்துகொண்டால்
உண்மையா யெலலாமுஞ் சித்தியாகும்
வருதியா யெல்லாமுஞ் சோதித்தேறி
வழுத்தினேன் எழுநூறு வகையாய்த்தானே.(180)

வகையாகக் களங்கத்தை முன்னேபண்ணு
வண்மைபெறச் செந்தூரம் பின்னேபண்ணு
நகையாமல் தன்பின்னே துருசுச்சுண்ணம்
நாட்டினுல் ரசங்கட்டி நன்மையாகும்
பகையாகச் சொல்லவில்லை பாருள்ளோர்க்குப்
பகுத்துணர்ந்த பாலகர்க்கும் பரிவாய்மெத்தத்
தகையாக நூலெல்லாந் தன்மைபார்த்துத்
தாக்கிடவே யெல்லாமுஞ் சித்தியாமே. (181)

சித்தியே யாகவென்றுற் கல்லுப்பைத்தான்
சித்திபெறப் பார்த்துமே உரைத்துக்கூடு
மூத்தியா யழுக்கெடுத்த எண்ணெய்போல
மூழுதுமே பார்த்துணர்ந்து மொழிகள்கேட்டு
நத்தியே திரிந்தலைந்து போகாமற்றான்
நலமாக எங்களுட நூலைப்பாரு
கத்தியே யிந்நூலைத் தேர்ந்துபார்த்து
கசடந்து யாகோபு கருதினாரே. (182)

கருதியே மனந்தன்னை யொக்கப்பண்ணி
கற்றுணர்ந்த வல்லோரைக் கேட்டடுத்து
திருதியாம் உன்மனது திட்டமாகும்
திடமாகப் பாகமெல்லாங் கண்டுகொள்ளு
வருதியாம் வல்லமையாய்ப் பார்த்துத்தேறு
வடிவாக அழும்புள்ள புத்திவேண்டாம்
நிருதியா யுன்மூளை செலுத்திப்பாரு
நிச்சயமா யாகோபு நிசஞ்சொன்னாரே. (183)

நிசமாக பின்னமொரு களங்குகேளு
நித்தியமா முத்தரென்ற மேனிச்சாற்றில்
வசமாக அரைத்துவில்லை காயவைத்து
வழியோடே புடம்போடச் சிவக்குமசம்பூ
தசமாக யெடித்துமே கல்வத்திட்டு
தடையறவே இடைக்கிடைதான் தங்கமிட்டு
பிசகாம லரைத்துமே வில்லைகட்டு
பேசினேர் யாகோபு பெருமைதானே. (184)

களங்குசேந்தூரிக்க.

பெருமைதா னிடைக்கிடையே செம்பிலீயப்
பிரியமாய் வெங்கலம்போல் தகர்த்துநிற்கும்
அருமையாய் வண்டிலது காலுஞ்சேர்த்து
அடைவாக வுருக்குமன்று யுருக்கித்தீரு
கருமையாய் வெங்கலம்போற் சத்தாய்நிற்கும்
காரணமாய்ச் சத்ததனைக் குகையிலிட்டு
வருமையா யுருக்கிடவே சொன்னேன்பாரு
வையகத்தி லென்பேரு விளங்கத்தானே. (185)

விளங்கவே சத்ததனைச் செம்புபண்ண
விருப்பமாய்ச் சித்தர்களுஞ் சொன்னரில்லை
தளம்பெறவே யிந்நூலில் வெளியாய்ச்சொன்னேன்
தாயகமாய்ச் சுடாதவைத் தானேசேர்த்துப்
பழங்கதைபோ லரைத்துவில்லை கதிரில்வைத்துப்
பரிவாக மூன்றுபுடம் போட்டாயானால்
களங்கமில்லாச் செந்தூர மாகும்பாரு
கர்த்தன்யா கோபுபபி கருத்திதாமே. (186)

கருச்சொன்னர் மதியெட்டி லொன்றுயிய
காரணமா யேமமது பத்துமாகும்
வருச்சொன்னு ரிவ்வேதை பார்த்துநீயும்
வழியோடே பிழைத்திருந்து கொண்டுவைப்பில்
தருச்சொன்ன போலதுபோல் மயங்கவேண்டாம்
தாஷ்டிகமாய் நூல்களெல்லாந் தகமைபார்த்து
குருச்சொன்ன யாகோபு குறித்தகோர்மை
குணமாகக் கண்டாக்கா லெல்லாமாமே. (187)

ஆமேதா னெல்லார்க்கும் வாதந்தன்னை
அடைவாகச் சொன்னக்காற் பலிதமில்லை
பூமேலஞ் ஞானிக்குத் தெரியாதப்பா
போதுமென்ற பிச்சைதனை யெடுத்துண்பார்கள்
நாமேதான் வாதங்கள் மிகவுஞ்சொல்லி
நானிலத்தில் மவுனமா யிருந்துகொண்டு
காமேதா னுலகத்தோர் கூடிகெடுக்கக்
கனமான யோசனைகள் கண்டார்தாமே (188)

கண்டுமே உலகத்திற் சிலதுபேர்கள்
களிவாக வாதங்க ளெனக்குரூன்றாய்
உண்டுமே தெரியுமென்று பொய்கள்சொல்லி
உறவாக நாகந்தான் கட்டுமென்பார்
தண்டுமே சொல்லியே ரவிபழுக்கும்
தக்கபுத்தி யோசனைகள் மிகவேசெய்து
பண்டுமே பழங்கதைகள் பேசுவார்பார்
பரிவாக அவர்களோடு நம்பவேண்டாம். (189)

நம்பாதே பொய்சொல்லும் வாதிதன்னை
நாட்டிலே சொல்லாதே நாடித்தள்ளு
வம்பாகப் பேசுவர்கள் வயித்தியத்தை
வடிவாக யோசனைகள் பண்ணிப்பார்த்துத்
தெம்பாகத் தள்ளிவிடு அவர்களுக்குத்
திடமாகச் சோறுமுதல் போடவேண்டாம்
தம்பமா யிப்படிக்குப் புலம்புகின்ற
சண்டாள வாதியைநீ தள்ளிப்போடே: (190)

தள்ளிடவே சண்டாளக் கோபந்தன்னைத்
தடையறவே தள்ளியே சுழியிலேறி
உள்ளிடவே உள்ளவா தாரம்பத்தி
உத்துகின்ற நபிமாரைப் போற்றிசெய்து
கள்ளிடவே அடிவணங்கிக் கண்டுநின்றால்
கர்த்தாவைக் கண்டிடவாங் கருவாய்ப்பாரு
தெள்ளிட்டுத் திரியாதே நான்தானசொன்ன
திட்டமதே தொல்லுலகில் தீர்க்கம்பாரே. (191)

அப்ரேக்சேந்தூரம்.

தீர்க்கமாய் அப்ரேக்குச் சென்தூரத்தைத்
திடமாக எழுதூறிற் சொல்லவில்லை
ஆக்கமாய் முன்தூறி லதிகவேதை
ஆண்மையா யாகுதற்குக் கைபாகத்தை
மூர்க்கமாய்ச் சொல்லுகிறேன் மூத்தப்போல
முடிவாக வொருகயத்திற் கோர்த்தாப்போலே
பார்க்குள்ளோர் அறியயா கோபுசொன்ன
பதிதிமுத்தி சித்தியெலாம் பார்த்திடாபே. (192)

பார்த்திடவே அப்ரேக்கு பலமும்பத்து
பதிவான வீரமது பலமும்ரெண்டு
கோர்த்திடவே யிதிரண்டுங் கொள்ளுச்சாற்றுல்
ருணமாக அரைத்துப்பார் வெண்ணெய்யாகும்
சாத்திடவே பெரியபுடம் போட்டெடுக்கச்
சரியாக நீறியே தவளம்போலாம்
வாத்திடவே யாகோபு சொன்னநீதி
வண்மையுட னுலகோர்க்கு வழுத்தினாரே. (193)

வழுத்திடவே காரீயம் பலமும்பத்து
வடிவான அயக்கரண்டி தன்னிலிட்டுக்
கழுத்திடவே வெடியுப்பு அஞ்சாங்காச்சல்
காரியமாய்ப் போடச்செந் தூரமாகும்
உழுதிடவே அப்ரேக மிடைக்குவங்கம்
உண்ணிதமாஞ் செந்தூரஞ் சேர்த்துக்கொண்டு
தழுத்திடவே கன்னியாங் குமரிச்சாற்றுல்
தன்மையாயரைத்துவில்லைநீட்டிக்கொள்ளே (194)

நீட்டியே சிவக்கமட்டும் புடத்தைப்போடு
சிவந்துவிடுங் காரணமாய்க் கருப்பில்லாமல்
மூட்டியே செந்தூரம் நாலுக்கொன்று
முடிவான தாளகமும் யிடைபதங்கம்
தாட்டியே சேர்த்தரைத்துக் கன்னிநீரால்
தாக்கியே புடம்போடச் சிவந்துநிற்கும்
பாட்டியே போகாதே யெடுத்துக்கொள்ளு
பதிவான யாகோபு பலன்சொன்னாரே. (195)

பலனென்ன கண்டாரைத்தான் செம்புபண்ணிப்
பதிவாக தூற்றுக்கு ஒன்றுதாக்கிப்
பெலமாகும் மாத்தேபெட் டரையுமாகும்
பெரியோர்கள் சொன்னதொரு நீதிதானும்
அலமாகத் திரியாதே அடுத்துப்பாரு
ஆராய்ந்து பார்த்தாலே யெல்லாமாகும்
குலமாகக் கண்டாக்கால் சுருக்கிலாகும்
குத்தமத்த யாகோபு குறிப்பிதாமே. (196)

குத்தமறச் செந்தூரந் தேனிலுண்ணக்
கொடிதான ரோகமெல்லாங் குணமதாகும்
பத்தறுமே காயமது அலரிபோலாம்
பார்த்துமே கைபாக வரிசைசெய்து
நித்தமதை யுண்டுமே நிணைவுபூண்டு
நீணிலத்திற் காயசித்தி நிணைவாய்ப்பாரு
முத்தரையா யாகோபு மொழிந்தவாறு
முத்திபெற்றுத் தானிருக்கச் செப்பினாரே (197)

செப்பிடவே வாதங்கள் கைபாகங்கள்
சிறப்பாக வைத்தாக்கால் மவுனமாக
கப்பிடவே யிருந்துகொண்டு தொழிலைப்பார்த்து
நாடியே சுயவசனம் பேசினீயும்
உப்பிடவே குணமாக யிருந்துவாழ்ந்து
உறுதிபெற நபிமாரை யடுத்துக்கொள்ளு
தப்பிதமாய்த் திரியாதே தலைகள்போகும்
சரியாக நீநடக்கத் தன்மையாமே. (198)

ரசக்களங்குச்சேந்தூரம்.

தன்மையாய்க் கொடுக்குமுன்னே பழுப்பதற்கு
தாட்டிகமா மின்னமொரு தகமைகேளு
உண்மையாய் வடமதுவும் பலமும்பத்து
உறுதியுற்ற வளையமது நாலாறுகும்
கண்மையாய் அன்னமென்ற பேதிதானும்
கருத்தாகப் பலமொன்று நிறுத்துக்கொண்டு
வண்மையா யுரலிலிட்டு யிடித்துவாலே
வகையாக அடைத்திமே சட்டிமூடே. (199)

மூடியே முன்னீரைத் தள்ளிப்போட்டு
மூடிவான கடைநீரை வடித்துக்கொண்டு
தேடியே குப்பிசெம்ப நிரப்பிநீயும்
திடமாகச் சூதமது சேருவொன்று
காடியே அதிலூக்கப் புகைநீர்தன்னைக்
கணக்காகப் பொறிந்துவிடுங் காளான்போல
கோடியே நிரவியமாம் பார்த்துக்கொள்ளு
குணமாக யாகோபு கொட்டினாரே. (200)

கொட்டியே பூத்தரசந் தன்னைவாங்கிக்
குணமாகக் குப்பியிட்டு யெரித்துக்கொள்ளு
பட்டியே சிவப்பாகுஞ் சிவப்புதன்னைப்
பதிவாகப் புறம்பாக வைத்துக்கொண்டு
துட்டியே கண்டரைத்தான் செம்பெடுத்துத்
துடிபாகக் குகையில்வைத் தருக்கும்போது
கட்டியே சத்தியது இடையேதாக்கு
கனமாக மொருங்கியது சத்துமாமே. (201)

சத்தெடுத்து மாடனைத்தான் பாதிசேர்த்து
சரியாகப் புகைநீரா லரைத்துக்கொண்டு
வித்தெடுத்து வில்லைகட்டிக் கதிரில்வைத்து
விதமாகப் புடம்பெரிதாய் போட்டுத்தீரு
கத்தெடுத்துப் பத்துபுடம் போட்டெடுக்கக்
காரணமாய் முருக்கம்பூப் போலாஞ்செம்பு
சித்தெடுத்துப் புறம்பாக வைத்துக்கொள்ளச்
சித்திபெற யாகோபு திடஞ்சொன்னாரே. (202)

திடமாகச் சொல்லுகிறேன் நித்திக்கேளு
திட்டமாய்ச் சூதசெந் தூரம்பத்து
நடமான சத்துச்செந் தூரம்பத்து
நாட்டியே யீதிரண்டுங் கல்வமிட்டுப்
படமான புகைநீரை முங்கவிட்டுப்
பார்த்தரைநீ இருசாமம் மைபோலாகும்
தடமான உமிநெருப்பில் வருத்துப்போடத்
தன்மைபெற யாகோபு தாக்கினாரே. (203)

தாக்கியே காசியென்ற மேருக்கிட்டு
தாட்டிகமாய்ப் பனிரெண்டு சாமந்தீதான்
நோக்கியே யெரித்தயெடு மூருக்கம்பூப்போல்
நுட்பமாய்ச் சிகப்பென்ன கண்கொள்ளாது
பாக்கியம்வந் துற்றதுபோ லெடுத்துக்கொண்டு
பக்குவமா யிதைவெளியிற் பகர்ந்திடாதே
வாக்கினுஞ் சொன்னதொரு நீதிமார்க்கம்
வகைகண்டால் தகைகாணும் வடிவாம்பாரே. (204)

வடிவான நவலோகம் நூற்றுக்கொன்று
வணக்கமாய்க் கொடுத்திடவே தங்கமாகும்
மூடிவான வாதமிது முத்தியாகும்
மூர்க்கமா யெல்லாருஞ் செய்யப்போகா
குடியாமீனுன் செய்தாக்கா லிடியும்வீழும்
குணமாகப் பெரியோர்கள் செய்வார்பாரு
துடியான வாதியார் செய்யார்மூடர்
துப்பறவாய்ப் படபடப்பாய்த் தோய்ந்துய்வாரே( )

தோய்ந்துமே பாராத வாதிதானும்
தொல்லுலகில் வாதம்வரு மென்றுசொல்லி
பாய்ந்துமே சரக்கைத்தான் கடையில்வாங்கிப்
பதிவாகச் சுட்டுமே பணம்போச்சென்று
சாய்ந்துமே சொல்லியே அலைகுவார்கள்
சாடையாய்ப் பின்னையுந்தான் பார்த்துக்கேட்டு
ஆய்ந்துமே யிந்நூலைப் பொய்யென்பார்கள்
அடைவிலா வாதிதா னுடுவாரே. (206)

ஆடுவார் வாய்ப்பேச்சால் பேசுவார்கள்
ஆதியாஞ் சரக்கைத்தான் கட்டவென்று
நீடுவார் மூலிகையைப் பிழிந்துகொண்டு
நிலையாகச் சுருக்கிட்டு நிகடம்வைத்துப்
போடுவார் ரவிபழுக்கு மென்றுசொல்லிப்
பூப்புடமுஞ் செய்வனென்று புலம்புவார்கள்
காடுவார் வீடதனி லிருக்குதென்று
கருத்தொட்டுப் பார்த்துமே அலைகுவாரே. (207)

அலையாமற் செந்தூரம் வைத்துக்கொண்டு
அன்பான ரவிதனிலே கொடுக்கயேமம்
உலைபாமலிதைவித்துச் செலவுசெய்து
உண்டுடுத்திப் பின்புதான் செந்தூரத்தைத்
தலையாமல் பணவிடைதான் உண்டுதேறு
தாக்கிடவே காயமது கற்றாணுகும்
அலையாமல் யாகோபு சொன்னநீதி
அவனிதனில் வணங்கியே வாழ்வீர்தானே. (208)

வெடியுப்புச்சுண்ணம்.

தானென்ற யின்னமொரு செம்புமார்க்கம்
தாஸ்டிகமாய்ச் சொல்லுகிறேன் தகமைகேளு
வானென்ற வடமதுவும் பத்துப்பின்னும்
வகையான வவையமது பலமூம்பத்து
கானென்ற புளியுமொரு பலமூம்பத்து
கடிதாகக் கல்லுரலி லிடித்துப்பின்பு
பானென்ற புதுச்சட்டி அடுப்பிலிட்டுப்
பக்குவமா யாகோபு பாகங்கேளே. (209)

பாகமா யெறியிடவே சாமமாக
பயின்றபின்பு தானெடுக்கப் பதிவாஞ்சுண்ணம்
பாகமா யெடுத்துமே பனியில்வைக்கப்
பாங்காகப் பலபலனச் செயநீராகும்
தாகமாய்ப் புகைநீரி லிடையேவிட்டுத்
தாட்டிகமாய் வீரமொடு பூரமீட்டு
யோகமாய் வைத்துமே சொல்லக்கேளு
உத்தமர்ந்து யாகோபு ஓதினாரே. (210)

ஓதினா ரின்னூரிற் சரக்கெல்லாந்தான்
உணவாகத் தோய்த்துமே வாட்டக்கட்டும்
கோதினார் லவணமுத லிருபத்தைந்தும்
குணமாகக் கட்டாகும் மெழுகுமாகும்
வாதிகள்தான் வைக்காமல் மூலிதன்னை
வகையாகப் பிடுங்கியே சாக்கிலூத்தி
மேதினியிற் கட்டியே சரக்குதன்னை
மிதமாகச் செம்புதனிற் கொடுப்பார்பாரே. (211)

நாகக்கட்டு.

தொடுப்பார்கள் நாகமொரு கட்டுச்சொல்வேன்
ணமாகுங் குற்றமறக் கூர்க்துபாரு
வடுப்பார்கள் இலுப்பெண்ணெய் தன்னிலேதான்
வகையாக இருபத்தே திரமும்சாய்த்து
தடுப்பாகச் செயநீரி லுருக்கிச்சாய்க்கத்
தாட்டிகமாய்ப் புகையடங்கும் தன்மையாகும்
படுப்பாகத் தகடடித்துக் கல்லுப்பைத்தான்
பதிவாக மேற்கவசங் கட்டத்தானே. (212)

கட்டியே புடமிட்டு யெடுத்துப்பாரு
கருணைபெறக் கரிபோலத் தூளுமாகும்
பட்டியே தூளினிடை சாரஞ்சேர்த்துப்
பதிவாக அரைத்துருக்க மணியுமாகும்
தெட்டியே மணிதன்னை உடைத்துப்பாரு
திடமாக வெள்ளிபோ லிருக்குமப்பா
குட்டிபோ லின்நாக மணிகள்தானும்
கூறினார் யாகோபு குணமாய்த்தானே (213)

நாகச்சேந்தூரம்.

குணமாக நாகமணி தன்னைத்தானும்
கூட்டியே கரியில்வைத்து உருக்கும்போது
மனமான தங்கத்தை யிடையேதாக்க
மடிந்துமே யிரண்டுமொன்றுய்ச் சேர்ந்துநிற்கும்
பணமாகத் தகடடித்துக் கெந்திவீரம்
பாச்சியரை தகட்டின்மேற் பூசிப்பூசி
உணவாகப் புடம்போடக் கருப்புமாகும்
உரைசெய்தார் யாகோபு ஒழுங்கிதாமே. (214)

ஒழுங்காக யெடுத்துமே செம்புநூறு
உத்துமே உருக்கியபின் சொல்லக்கேளு
தழுங்காக ஒன்றுயிடத் தாணியோர்க்குத்
தாட்டிகமா யிருபதின்மே லஞ்சுமாத்து
வழுங்காகப் பெரியோர்கள் செய்வாரப்பா
வாதிக்கும் பித்தாகும் மிஞ்சுதேறு
கழுங்காம லிவ்வேதை உறுதியாகும்
கற்றுணர்ந்த யாகோபு கருதினாரே. (215

கருதியே உலகத்திற் சிலதுவாதி
காரணமாய் நாகத்தைக் கொண்டுவந்தால்
பருதியுள்ள மட்டுக்குந் தங்களுஞ்செய்வேன்
பாரென்று நாகத்தை உருக்கிச்சாய்த்து
அறுதியா யதையெடுத்து வைத்துக்கொண்டு
அறிந்தவர்போல் மறைவாகக் கையில்வைத்து
உறுதியாய்ப் பொன்னுச்சு தென்றுசொல்லி
உலுத்தரவர் திரிவார்கள் உற்றுப்பாரே. (216)

உத்தமே சிலதுபேர் சாலக்காரர்
உண்மையாய் கான்கண்டே னென்றுசொல்லி
அத்தமே சொல்லியே புலம்புவார்கள்
அவர்களுக்குப் பொன்னில்லை அலைவாரப்பா
கத்தியே செய்திட்டுத் திரிவானப்பா
கண்டிடுமே செம்புநீ கருத்திலேதான்
சித்தமதி லுலகத்து மானிடர்க்குச்
சித்தமாய்ச் சொல்லிவிட்டேன் பண்பாய்த்தானே.

பண்பாக எழுநூறு முன்னேபாரு
பகர்ந்ததொரு முந்நூற்றைப்பத்திப்பாரு
நண்பாய்ச்சென் தூரம்மூன் நூறும்பின்பார்
நானிலத்திற் பார்த்தறிந்து வாதம்பார்த்தால்
உண்மையா யுருத்தோடே ஞானந்தன்னை
உலகத்தில் நீதியா யுற்றுப்பாரு
கண்பார்வை செய்திட்டுக் களங்குசெய்யக்
காரியமா யாகோபு கருதினாரே. (218)

கருத்தாக எந்நூலைக் கண்டுபார்க்கக்
கருத்துணர்ந்து செம்பெல்லா மெடுத்துப்பாரு
பொருத்தாகக் கைபாக வரிசையாலே
புக்கியே சாஸ்திரத்தைப் பொருத்தப்பார்த்துத்
திருத்தியே செந்தூரஞ் செய்துவுண்ணச்
சித்தியாஞ் சகலமுந்தான் சித்தியாகும்
வருத்தியே நூலில்லா வாதம்பார்த்து
வழிதெரியா திருந்தநிலை மார்க்கமேதோ. (219)

மார்க்கமா யெழுநூறு முன்னேசொன்னேன்
வகாரநூல் முந்நூறு பின்னேசொன்னேன்
தீர்க்கமா யிதிலிருந்து களங்குசெய்வாய்
திகழ்பஞ்ச மித்திரமுந் நூறுசொன்னேன்
ஏர்க்கவே மூன்றுநூல் தன்னைப்பார்த்து
எய்தியதோர் சரக்கினுட பொருளறிந்து
பார்க்குள்ளே செய்தாக்காற் பலனுமாகும்
பகுத்தறிந்து செம்பெல்லாம் பரிவாய்ப்பாரே. (220)

பரிவாகப் பகுத்துணர்ந்த பெரியோர்பாதம்
பக்குவமாய்க் கண்டுமே பாதந்தன்னைத்
தெரிவாகப் பிடித்துமே தோய்ந்துகேளு
செப்புவார் களங்குமுதற் செந்தூரங்கள்
விரிவாகக் கேட்டுமே காத்துக்கொள்ளு
மேன்மையாங் கண்டுணர்ந்து யிருந்துபாரு
சரியாகக் கைபாக வரிசையெல்லாம்
சாதித்தால் லோகத்திற் சார்ந்துகொள்ளே. (221)

சார்ந்துமே கெந்தியைத்தான் நித்தம்பூசிச்
சரியான களங்குமுதற் செந்தூரங்கள்
வார்ந்துமே பாகமாய்ச் செய்துகொண்டு
வகையாகச் செம்பெடுத்து மதியில்தாக்கு
கூர்ந்துமே சுடரொளியைக் கண்டுதேறு
குணமாகும் வாதமெல்லாம் தொடிக்குள்ளாகும்
பார்ந்துமே பகலிரவாய்த் தோய்ந்துபார்த்துப்
பதிகண்டு பக்குவமாம் பாரிலோர்க்கே. (222)

பாரிலே யிருப்பதற்கு வாதம்வேணும்
பக்குவமாய்ப் பொருள்வேணும் பண்புகேளு
ஊரிலே நீசெய்யும் வாதமார்க்கம்
ஒருவருக்குந் தெரியாம லிருக்கவேணும்
வேரிலே ஜலம்விட்டாற் றழுக்கும்பாரு
வேதாந்தி யாயிருந்து காலந்தள்ளு
காரிலே கண்டபே ருடனேசொல்லிக்
கண்கெட்டுத் திரியாதே கருத்தாய்ப்பாரே. (223)

கேந்தக பற்பம்.

கருத்தாகச் சுத்திபற்பந் தன்னைக்கேளு
கனிமாங்காய்ப் பாற்சோறு தானெடுத்து
வருத்தாகக் கல்வத்தி லிட்டுநன்றாய்
வடிவாக நெல்லிசத்தி தன்னைவிட்டு
உருத்தாக அரைத்துமே சாமம்காலு
உண்மையா யரைத்துவில்லை கதிரில்வைத்துத்
திருத்தமாய் மேற்கவசஞ் சொல்லக்கேளு
திடமாக யாகோபு சொன்னவாறே. (224)

சொன்னதொரு கல்லுப்புச் சேருநாலு
சுகமாகக் கல்வமிட்டு மேனிச்சாறு
நன்னயமா யரைத்துகடல் நுரையைச்சேரு
நலமாக இரண்டுமொன்றாய் நேகவாட்டி
கன்னலாய் விலைகட்டி உலையிலூதக்
கடுஞ்சுண்ணங் கல்லுப்புச் சுண்ணமாகும்
பின்னமில்லா மற்றோனே மேனிச்சாறு
பிலக்கவிட்டுத் தானரைத்துப் பின்புகேளே. (225)

பின்பாக முன்வில்லை மேலேதானும்
பிரியமுடன் கவசமது வலுவாய்ச்செய்து
அன்பாகக் காயவைத்துப் புடதைப்போடு
ஆறியே யெடுத்துநீ பார்க்கும்போது
நன்பாகத் தும்பைப்பூப் போலாம்பற்பம்
காடியே யெடுத்தபின்பு காட்டக்கேளு
தின்பாக ரவியுருக்கி யதிலேதாக்கு
திடமாகப் பொன்னுகும் செல்வமாமே. (226)

செல்லவே செம்பதுவும் பழுத்துப்போகும்
செப்பரிது வித்துமே செலவுசெய்து
மல்லவே ஞானவழி யடுத்துப்பாரு
மனதோடு வாசியோ கத்தைப்பாரு
நல்லவே ஒருவருக்குஞ் சொல்லவேண்டாம்
காட்டியே உண்டுடுத்தி நலமதாகச்
சொல்லவே பார்த்துணர்ந்து அறிவிற்கூடு
சுகமுணர்ந்த யாகோபு சொல்லிட்டாரே. (227)

சொல்லிடவே செம்புமுத லெல்லாம்பார்த்துச்
சுருதியுடன் கைபாக வரிசைகண்டு
கல்லிடவே குளிகைமுதல் செந்தூரங்கள்
கனமான பொருளறிந்து கண்டுதேறி
வல்லிடவே மக்காவின் காட்டைவிட்டு
வழியோடே கீழ்தேசம் வந்துதானும்
புல்லிடவே யெளியோர்க்காய் வாதஞ்சொன்னேன்
புவியிலுள்ளோ ரிதையறிந்தாற் பெலனுண்டாமே.

பெலமாகப் பாஷாண மெல்லாந்தானும்
பிரித்துமே கசடகற்றிச் சத்துப்பண்ணி
வலமாகச் சத்தையெடு செம்புபண்ணு
வழியோடே மதினிலே பாச்சிப்பாரு
அலனுக யேமமாம் அடுத்தடுத்து
அடைவாக வித்துமே செலவுசெய்து
கலனில்லா ஞானங்கள் பார்த்துத்தேறு
கர்த்தாவைத் துதியென்று சொன்னூர்பாரே. (229)

சொன்னதொரு மூன்றறி லெல்லாஞ்சித்திச்
சுருதிமுறை யறியாட்டா லெல்லாம்பாழாம்
கன்னலுற நீதிதனை அறிந்தால்ஞானி
கருத்தறியா ஞானிதான் கழுதைமேக்கி
இன்னிலத்திற் சரக்கதனை யறியாவாதி
யிடும்பான புத்தியிலார்க் கிணபமில்லை
கன்னூலை யறியாதார் கலமிலாதார்
காட்டியே யாகோபு கவின்றவாறே. (230)

அய்க்களங்கு.

கவின்றிடவே இன்னமொரு இரும்பின்மார்க்கம்
கலமான ஓழுகரைதான் பலமும்பத்துக்
கவின்றிடவே தருசியது பலமும்பத்துக்
கலமாக ராவியிதைக் கல்வதிட்டுத்
தவின்றிடவே சத்தியது பலமுமுக்கால்
தன்மையா யிட்டுபழந் தன்னூலாட்டி
உவின்றிடவே புதுக்குகையி லிட்டுருக்கு
உண்மையா யாகோபு உரைசெய்தாரே. (231)

செய்திடவே சத்தாகும் வண்டில்கூட்டிச்
செழுமைபெற உருக்கிடவே மணிபோலாடும்
பைதிடவே இச்சத்தின் மகிமைதன்னைப்
பானலும் முடியாது மற்றோர்காணுர்
வெய்திடவே சகலமுந்தா னிதுக்குள்ளாகும்
வேதாந்த மார்க்கத்துக் கிதுவேயாதி
நைதிடவே செம்பில்நின்ற சத்தெடுக்க
நாட்டினுர் யாகோபு கலமதாமே. (232)

கலமாகச் சத்தாதுவும் பலமும்பத்து
நாட்டியெடு சுடர்கூளை பாதியிட்டுப்
பெலமாக அரைத்தவில்லை கதிரில்வைத்துப்
பின்பதற்கு மேற்கவசஞ் சொல்லக்கேளு
வலமாகக் கடல்நுரையும் கல்லுப்புந்தான்
வடிவாக இடைசமனுய்ச் சேர்த்துக்கொண்டு
கலமாக மேனியிலைச் சாற்றுலாடடிக்
கணக்காகப் புடம்போடச் சுண்ணமாமே. (233)

சுண்ணமா முன்வில்லை மேலேகட்டிச்
சுருக்காகக் காயவைத்துப் புடமுமிட்டு
நன்னயமா யெடுத்துமே கல்வத்திட்டு
நாடியே முன்னீரா லரைத்துக்கட்டிப்
பின்னமாய்ச் செய்யாமற் புடமுமிட்டுப்
பேசரம லெடுத்துப்பார் செந்தூரிக்கும்
சொன்னபடி மாத்தாகுஞ் சொன்னேன்சொன்னேன்
சுருதிபெற யாகோபு சொன்னவாறே (234)

சொன்னதொரு செந்தூஞ் செம்பிலிட்டால்
தொல்லுலகில் ரசவாதந் திடியுமாகும்
நன்னயமாய்ப் பேசார்கள் பெரியோர்தானும்
நாட்டிலே சொல்லார்கள் நல்லோருக்குப்
பன்னவே சொல்லுவா ரிந்தவித்தைப்
பார்ப்பார்க ளனைவோரும் படிப்புள்ளோர்கள்
வன்னயமாய்த் தொழிலாகும் வாதவித்தை
வையகத்தில் யாகோபு வகைசொன்னுரே. (235)

வகைசொன்ன உலகத்தில் வாதிதானும்
வடிவாக மாத்துகள்தான் நிரம்பவேணும்
பகையென்ன பேராசைப் பட்டுப்பட்டுப்
பாரிலே திரிந்தலைந்து பட்டுப்போவார்
நகைசெய்து திரிவார்கள் நானிலத்தில்
நாடிமீகப் பேசிபல கோடிகோடி.
துகையாக வைப்பமென்று பேசுவார்கள்
துடியான யாகோபு சொன்னவாறே. (236)

வரேது யென்றுக்கால் சொல்லக்கேளு
வடிவான ஒருமாத்து நபிமாராகும்
தாரேது மாத்துத்தா னிரண்டானுக்கால்
தக்கதொரு இறைவனுந் தரணியோர்க்குக்
கூரேது ஞானவான் பேருக்குத்தான்
குணங்கண்டு பொன்னோடே பொன்னைச்சேர்த்து
வரேது லாபம்வரச் சொன்னநிந்நூல்
வடிவான பொருளதுவாம் வண்மைபாரே. (237)

வண்மையாய்ப் பொய்சொல்லார் நிலைச்சவாதி
வடிவான பொருளறியார் பொய்கள்சொல்வார்
உண்மையாய்ப் பொருளைத்தான் கேட்பாரப்பா
உறுதிபெற்ற பெரியோர்கள் கேட்கமாட்டார்
தண்மையாய்ச் சொல்லிடுவார் சவுங்கவாதி
தாக்கிமிகப் பேசிடுவார் ஒன்றுமில்லார்
பண்மையாய்க் குணங்களுடை யோருக்கெல்லாம்
பாரிலே பதவியிலலை பண்புமாமே. (238)

பண்பாக ஆண்டவனைத் துதியேசெய்து
பத்திமுத்தி வைராக்யம் பண்ணிக்கொண்டு
பெண்பார்வை யில்லாமல் வாதந்தன்னைப்
பெரியவரா யெண்ணியே பின்புரியும்
உன்பார்வை செய்தமே செம்புதன்னை
உறுதிபெற யெடுத்தமே ஒழுங்கதாக
நன்பாகச் செய்திடுவா யென்றுசொன்னார்
நலமான யாகோபு நவின்றிட்டாரே. (239)

கவின்றிட்ட மொழிகேட்டு நபிமாரெல்லாம்
ஈடியே வாதமிகச் செய்துகாட்டக்
கவின்றிட்ட அடியேனுங் கற்றுக்கொண்டு
கானகத்தி லேகியே கணக்கைப்பார்த்துத்
தவின்றிடசாஸ் திரத்தினட்ட வணையைக்கொண்டு
தடையறசாஸ் திரமுஞ்சூஸ் திரமும்பாடி
துவின்றிட்ட தொல்லுலகில் சொன்னேனப்பா
அடியான யாகோபு தோய்த்திட்டேனே. (240)

தோய்த்திட்டேன் ஆதியிலே ராமதேவன்
அடியான மக்காவின் தேசம்புக்கி
ஆய்த்திட்டேன் அவ்வேதந் தன்னிற்புக்கி
ஆராய்ந்து பிறசூலைக் கண்டுபோற்றிப்
பாய்ந்திட்டேன் குளிகையிட்டுப் பறந்துபோனேன்
பாகமாய்ச் சொன்னதொரு செம்புதன்னை
வாய்ந்திட்ட மாயெடுத்து வாதம்பார்த்தேன்
வடிவாயா கோபென்றே வாழ்த்தினரே. (241)

வாழ்த்தினர் சொர்ணமய மாகவென்று
வளமான வாதமெல்லாம் கேட்டுக்கொண்டு
பாத்தியே பதிவான சத்துச்சொன்னேன்
பாருலகில் நபிமாரைப் பத்தித்தேறி
காத்தியே குளிகைகட்டி விந்துருக்கிக்
கனமான பெருளெல்லாங் கண்டுதேறி
தாழ்த்தியே யிகபரத்துக் கொப்பாய்ச்சொன்னேன்
தாட்டிகமா யாகோபு தன்மைதானே. (242)

தாம்பூரக்கிளங்கு.

தண்மையாம் ஊரலென்ற பரியின்செம்பு
தாஷ்டிகமாய் வாதிக்குப் பார்க்கக்கேளு
உண்மையாய் ஊரலென்ற பரிதான்பத்து
உத்துமே குகையிலிட்டு உருகும்போது
கண்மையாய்ச் சத்தியுடன் சிகரஞ்சேர்த்துக்
கனிவாக அரைத்தவுண்டை யிடைதான்தாக்க
வண்மையாய் மடிந்துஅது சத்துமாகும்
வளமாக யாகோபு வகைசொன்னரே. (243)

வகையாக வண்டிலிடு பாதிதானும்
வைத்துரைப்பார் கவ்வமிட்டுப் பாணியாலே
தகையாக அரைத்துவில்லை சுட்டும்போது
துடியாகக் குகைதன்னி லிட்டுப்போடு
பகையாக உருகியது மணிபோலாகும்
பாலித்துக் கசடகற்றிப் பதிவைக்கேளு
நகையாகக் கல்வமிடு வென்றுசொன்னார்
ஞானிலத்தில் யாகோபு நடக்கைதானே. (244)

நடக்கையாஞ் சுடர்க்கொடியோன் பாதிசேர்த்து
நல்லதண்ணீர் தன்னாலே அரைத்துவில்லை
படக்கையாய்க் கட்டியே கதிரில்வைத்துப்
பரிவாகப் பெரியபுடம் போட்டெடுக்க
வடக்கையாய்க் கருப்பாக யிருந்துதானால்
வடிவாக இன்னமொரு புடமுமிட்டுத்
துடக்கைத்தான் நீக்கிடச்செந் தூரமாகும்
துடியாக யாகோபு சொன்னவாறே. (245)

வாறேது வென்றுக்கால் சொல்லக்கேளு
வகையுள்ள நவலோகந் தன்னிலீய்ந்து
காறேது பொன்னுகும் பொன்னைத்தானும்
கண்டுகொள்ள மாத்ததுவும் பத்துமாகும்
தூறேது கேணிபோ லிறைக்கும்பாரு
துடியான சொன்னத்தை வித்தேயுண்டு
சாறேது ஞானங்கள் மிகவும்பார்த்துத்
தாட்டிகமா யாகோபு தாக்கினாரே. (246)

தாக்கிப்பார் பெரியோர்கள் சொல்லமாட்டார்
தருதரும்பன் சொல்லிடுவான் குடும்பவாதி
தூக்கிப்பார் பாகத்தை யறியாமூடர்
துடியாகப் பொய்சொல்வார் மார்க்கமில்லார்
சோக்கிப்பார் கொடுமைசெய்வார் காதலாக
நொடிக்குமுன்னே பிரட்டுகளைக் கொண்டுசெய்வார்
வாக்கிப்பார் உருட்டுகளைச் சொல்லிச்சொல்லி
உறுதிமிக வாராமற் றிரிவார்தானே. (247)

திரியாமற் பித்தலேயைச் செம்புபண்ணி
திட்டமா யுண்டுடுத்தித் திரிந்தாயும்
பிரியமாய் ஞானங்கள் மிகவும்பார்த்துப்
பேசாமல் வாய்மூடி இக்நிலத்தில்
தரிதமாய்த் திரிந்தாக்கால் தோயாதப்பா
துப்பறவா யுடத்துமே பழகவேணும்
சரியாகப் பார்த்திடவே தடையுமில்லை
சல்தியா யாகோபு சொன்னவாறே. (248)

சொன்னதுதா னதியிலே கருவும்பாடி
தோயவில்லை யென்றுமே மறுவேதத்தில்
இன்னிலத்திற் றிரிந்துமெழு நூறும்பாடி
இரண்டுவகை மூன்நூறு பாடித்தீர்ந்து
நன்னயமாய்ச் சத்துவகை செம்பும்பாடி
நயமாகக் குளிகையுட நிறமும்பாடி
தன்னிலே பார்க்கும்வகை தன்னைப்பாடி
தடையறவே மலைகுகையி லிருந்திட்டேனே (249)

இருந்திட்டேன் மலைகளெல்லாந் திரிந்துசுற்றி
யிதமாக அந்தந்த நிலையுங்கண்டு
கருந்திட்ட பெரியோரைக் கண்டுபேசிக்
கலக்கமதது வினைகளெல்லாம்பார்த்து
அருந்திட்ட ஆதரவாய்ப் பாகஞ்சொன்னேன்
அடியான ஆதிமுதல் செந்தூரிக்க
வருந்திட்ட மவரவரின் வினையம்பாரு
வடிவான யாகோபு சொன்னவாறே. (250)

சொன்னபடி வடமொழியைப் பார்த்துத்தேறி
தோய்த்துமே கைபாக மாகப்பாடி
இன்னபடி யென்றெழுதி இதமாய்ச்சொன்னேன்
இதமான புத்தியுள்ளோர் அறிந்துகொள்வீர்
கன்னல்போ லென்னுலகக் கண்டுதேறி
கணக்காதச் செய்தாக்காற் பலனுமாகும்
நன்னயமாய்ப் பாடிவைத்த நூல்களெல்லாம்
நாயகமா மிந்நூலும் நட்புதானே. (251)

கட்பாகப் பொருளறியச் சுட்டுவாதி
காடியே கான்செய்வே னென்றுசொல்லி
மெட்பாகப் பொய்யுரைத்துத் திரிவாரப்பா
மேதினியி லவர்பேச்சை நம்பவேண்டாம்
உட்பாக உரைத்தஉப்பு விழிபோலாகும்
உண்மையில்லார்க் கொன்றுமில்லை உலுத்தமாடு
புட்பாகந் தெரியாது பொல்லாவாதி
புரட்டுகளைச் சொல்வார்கள் பிரட்டாய்த்தானே.()

பிரட்டாகச் சொன்னதினுற் பலன்தானேது
பெரியநபி யென்றபிர தாபமேது
திரட்டாகப் பாடியதாற் பலன்தானேது
திட்டிவைத்துத் திறந்தாலே ஞானமேது
விரட்டியே திரிந்தலைந்தால் யோகமேது
விதமான பொருளில்லா விடுபட்டோடும்
கரட்டாகச் சொன்னதினுற் பலன்தானேது
காடுறைந்த கருவாளி காண்பான்பாரே. (253)

காணவே பொருளில்லா வாதமேது
கைக்கடங்காப் பிள்ளைக்குக் கருத்தங்கேது
பூணவே பூஞ்சரம் பூணுர்க்கேது
பொல்லாதார்க் கொன்றுமில்லை பிரியமுண்டோ
வாணவே வடிவில்லான் ஆசையேது
வகையறியார் தகையறியார் வழக்கமேது
தோணவே கடப்பதற்குப் பாதமேது
துடியாதார்க் கொன்றுமில்லை தீர்க்கந்தானே. (254)

தீர்க்கவான் யாகோபு சொன்னநீதி
செகத்தினிலே ரிஷிகள்சித்தர் யோகிக்குத்தான்
மார்க்கமாய்த் தெரியாது தெரிந்துதானுல்
மயமாகச் சொல்வார்கள் வாதமார்க்கம்
ஏர்க்கவே பேசிடுவா ரினிமையாக
இடும்பாகப் பேசியதால் வாதம்பொய்யாம்
பார்க்குள்ளே யிருக்கமட்டுப் பலமதாகும்
பத்திதரும் யாகோபு பலன்சொன்னாரே. (255)

வெள்ளிக்களங்கு.

சொன்னதொரு களங்கெல்லாம் மெய்யதாகும்
சுருக்கான வெள்ளியதிற் களங்குகேளு
நன்னயமாய்ச் சொல்லுகிறேன் உலகத்தோர்க்கு
நாட்டினுல் ரசவாத முண்டுகாணும்
இன்னிலத்தி லிருக்கமட்டும் வைத்துப்பாரு
இன்பமாய் நிற்பதற்கு மொருக்குவெள்ளி
கன்னல்போற் கடைசிதனிற் சொல்வேன்யானும்
கற்றுணர்ந்து யாகோபு கருவாய்ச்சொன்னேன். ()

கருவாகக் கருக்கன்வெள்ளி பலமுஞ்சேரு
கனிவாக உருக்கியே கட்டியாக்கி
வருவாக ஆட்டெலும்பு பலமும்பத்து
வகையாகச் சுட்டுமே மாறக்சேரு
தருவாகச் சுக்கானும் பாதிசேர்த்துத்
தணியரைத்து நிகடையது பண்ணிக்கொண்டு
உருவாக அதில்வைத்து உருக்குவெள்ளி
உண்மையா யிடைக்கிடைதான் வங்கஞ்சேரே. ()

வங்கமென்ற நல்லீயங் கருக்கன்வெள்ளி
வகையாக உருக்கையிலே முகத்திற்றுக்கி
சிங்கமாய்ச் செம்புதனைத் தள்ளிப்போடும்
சிறக்கவே வுள்ளேதான் புகுந்துகொள்ளும்
தங்கமது செம்புதன்னைச் சுத்திவாங்கி
தருகாது ஊதினபின் னுத்தினுலே
பங்கமாய்ப் பண்ணியே செம்பையிட்டுப்
பதிவாக மதிதரையில் பசுமைபாரே. (258)

பசுமையாம் வெள்ளிதனைத் தகடுதட்டிப்
பத்தலது சிகரமது இடையேசேர்த்து
வசுமையாய்க் கைத்தபழம் பாலிவிட்டு
வடிவாக இருசாம மரைத்துக்கொண்டு
தசுமையாய் முந்நூறும் வெள்ளிதன்னில்
தாக்கியிடு மேற்கவசங் கட்டிப்போடு
உசுமையாய் அட்டைபோற் சுருங்கிப்போகும்
ஒதினுர் யாகோபு ஒழுங்கிதாமே. (259)

ஒழுங்காக இப்படிக்குத் தடவிமூன்று
உறுதியாய்ப் புடம்போட்டு உடைத்துப்பாரு
கழுங்காக வெட்டையாங் கரிபோற்றோணும்
நாடறிய அதைக்கல்வந் தனிலரைத்து
வழுங்காமல் வழித்துவில்லை காயவைத்து
வழியோடே புடமிடவே கருப்பதாகும்
தழுங்காமல் யாகோபு சொன்னநீதி
தாட்டூக மாகவே திடஞ்சொன்னேரே. (260)

திடமென்ன கரியாகும் வெள்ளிக்குத்தான்
திறமான ஆலாத்தி பாதிசேர்த்து
படமென்ன வாய்நீர்விட் டரைத்துவில்லை
பதிவாக இப்படிக்கு மூன்றுபோட்டு
கடமென்ன கரியில்வைத்து வண்டில்கூட்டிக்
காரியமாய் நசுக்கிபொடி பாக்கிப்பின்பு
விடமாக உருக்கிடவே வெள்ளியாகும்
விருதாவாய்க் குறையாது விருப்பமாமே. (261)

விருப்பமா யிக்தவெள்ளி மூத்துப்போலே
வீரியமா யுருக்கியே தகடுதட்டித்
திருப்பாகக் கரியோட்டிற் புளிகரைத்துத்
திறமாகக் கெந்தியது பாகமாகத்
தருப்பாகச் சேர்த்துமே பழுக்கச்சுட்டால்
தாஷ்டிகமாய்த் தங்கம்போற் பழுக்கும்கன்றாய்
குருக்கிடையுங் கருக்கிடையும் பார்த்தால்வாதம்
குணமாகும் மணமாகுங் கூர்ந்துபாரே. (262)

கூர்ந்துபா ரிப்படிக்குப் பரிசோதித்தாற்
குணமான சத்ததனிற் செம்பெடுத்து
தேர்ந்துமே எட்டுரெண்டு கொடுத்தருக்கு
திடமான மட்டத்தைச் சிவக்கக்காச்சில்
வார்ந்துமே பழச்திஞற் பாகமாகும்
வகையாகப் பழுத்தாக்கால் தங்கத்தன்னைச்
சோர்ந்துமே சேர்க்காதே யாகோபுத்தான்
சுகமான வித்தையிதைச் சொன்னர்பாரே. (263)

சொன்னதொரு ஆடையாள மாய்ப்பழுத்த
சுகமான மட்டத்திற் றங்ஞ்சேர்க்க
நன்னயமாய்ச் செட்டிகையி லேறம்பாரு
நலமாகப் புடத்திலே யிறங்கும்பாரு
பின்னங்க ளில்லாமற் சொல்லிப்போட்டேன்
பேசரிது பேசரிது பெருமைமெத்த
வன்னங்கள் சிலிக்குவந்த வாறபோல
வகையாகும் யாகோபு வரிசைதானே. (264)

வரிசையாய்க் கைபாக வரிசையாடே
வகையாகச் செய்தாக்கால் வாதமாகும்
பரிசையாய்க் கைபாகந் தப்பிப்போனால்
பதிவாக வெல்லாமூர் தப்பும்பாரு
புரிசையாய்ப் பிரியமாய்ச் செய்துகொண்டு
பொருந்திடவே கொருக்குவெள்ளி போட்டுப்பாரு
உரிசையாய் நாக்குருசி போலேபாரு
உற்றுணர்ந்து யாகோபு ஓதினாரே. (265)

ஓதினார் முன்வேதந் தன்னிற்றானும்
உறுதியாய்ப் பாண்டங்கள் மிகவுஞ்சொன்னேன்
வாதிதான் பார்த்துமிகச் சுட்டுக்கெட்டு
வகையறியா ரதனாலே பொய்யென்பார்கள்
கோதியதோர் கிளிபோலே சொல்லிப்போட்டேன்
குவிந்தபடி சொன்னுக்கா லென்னசெய்வேன்
போதித்தேன் கைபாக வரிசைதானும்
புகழாக யெல்லோர்க்கும் பெருமைதானே. (266)

பெருமையாய் வாதங்கள் மிகவும்பார்த்துப்
பேசரிய யாகோபு யென்பேராச்சு
அருமையா யுலகத்தில் வாதிதானும்
அடைவாக வொன்றைவிட்டு வொன்றைச்செய்து
ஒருமையா யுலகத்தி லிருந்துகொண்டு
வொன்றிருக்க வொன்றுசொல்வா ருலகவாதி
கருமையாய்ச் செய்வார்கள் தெரியாமற்றான்
காட்டினார் யாகோபு கருச்சொன்னாரே. (267)

சொன்னதொரு சாஸ்திரங்கள் பதினேழாகும்
சுருக்கமாய்ச் சொல்லிவிட்டேன் குறிப்பதாக
கன்னயமா யென்பாடல் பார்த்தபேர்க்கு
ஞானிலத்தில் ரசவாதம் யேவல்செய்யும்
கன்னல்போ லாகுமிது வசனம்பொய்யா
கற்றுணர்ந்தால் எல்லாமுஞ் சித்தியாகும்
பின்னமில்லா மற்சொல்லிப் போட்டேனென்று
பிரட்டில்லா யாகோபு பேசினேனே. (268)

பேசியதோர் மக்காவின் தேசந்தன்னிற்
பிரபலமாம் பெரியோர்கள் மிகவுமுண்டு
வாசினதோர் எளியோர்கள்க ளில்லையில்லை
வகையான நபிமார்கள் மெத்தவுண்டு
மாசில்லா நபிமார்கள் மெத்தவுண்டு
வழியோடே யிருப்பார்கள் நிறத்தைக்கேளு
காசியே செவ்வலரி போலாந்தேகம்
கற்றுணர்ந்த யாகோபு கருச்சொன்னாரே. (269)

சொன்னதொரு நூலில்லா வாதம்பார்த்தால்
தோசியவன் பொன்மாத்துக் காணமாட்டான்
நன்னயமாய்ச் சொல்லுவான் பசப்புவான்பார்
ஞானிலத்தில் மூலிகைக ளிருக்குதென்பான்
பின்னமில்லா மற்றுனே சொல்லிப்போட்டுப்
பிரட்டாக ஒருபொருளே யறியானப்பா
கன்னல்போல் மக்காவின் தேசந்தன்னிற்
கற்றுணர்ந்தேன் யாகோபு கருவிட்டேனே. (270)

அயதாம்பூரக்களங்கு.

விட்டதொரு களங்கதனைச் சொல்லக்கேளு
விருப்பமாய் நபிமார்கள் ஆடும்நேர்மை
தொட்டதொரு சகலமுந்தான் சித்தியாகும்
சொல்லுகிறேன் சைபாக வரிசையாக
பட்டமுடன் சேர்க்குமந்த வாகுதன்னைப்
பயமாகச் சொல்லுகிறேன் மார்க்கப்போக்கைத்
திட்டருடன் சொல்லாதே நரகமெய்தும்
தொல்லுலகில் யாகோபு தோய்ந்திட்டாரே. (271)

தோய்ந்திட்ட நபிமாரைப் போற்றிசெய்து
தொல்லுலகில் செம்பதுவுஞ் சுருக்கமாக
வாய்ந்திட்ட கண்டாது செம்பிரண்டும்
வகையான அயம்நேரம் சத்திநேரம்
ஓய்ந்திட்டுக் கல்வமதி லரையன்னத்தால்
உறுதியாய் வில்லைகட்டிக் கதிரில்வைத்துச்
சாய்ந்திட்டுப் போகாமற் புடமுமிட்டுச்
சரியாக வண்டிலதைச் சேர்த்துப்பாரே. (272)

சேர்த்துமே அரைத்தன்ன நீரினுலே
செழுமைபெறக் குகையிலிட்டு உருக்கிப்பாரீ
பார்த்துயெடு சத்தாகும் சத்தின்போக்கைப்
பதியநபி மார்கள்தான் ஆடும்ஆட்டு
சாத்துவீர் வெள்ளிபோ லாகும்பாரு
சத்தியமாய்ச் சத்துநின்ற யிடையேபாதி
கோத்திடுநீ சித்தருட ரூபிதன்னைக்
குணமாய்ச்சே ரென்றார்யா கோபுதானே. (273)

தானென்று சேர்த்துமே கல்வத்தன்னில்
தாட்டிகமாய்ப் பொற்றலையின் சாற்றூலாட்டி
வானென்று வில்லைகட்டிக் கதிரில்வைத்து
வடிவாக ஓட்டிலிட்டுப் புடமூன்றிட்டால்
ஊனென்ற செந்தூரம் உறுதியாகும்
உற்றுணர்ந்து யெடுத்துமே உண்மையாகப்
பானென்று மதியெட்டி லிரண்டுசேரு
பரிந்துமே யாகோபு சொன்னவாறே. (274)

பரிந்துமே மதிதனிலே சேர்த்தருக்கப்
பகாரிது பொன்னுகும் பொன்னினுடே
வரிந்துமே யேமமது காலுங்கூட்டி
வகையாக உருக்கிப்பார் எட்டுமாத்து
விரிந்துமே உப்புக்கும் காவிக்குந்தான்
மேலாக யிருந்திடுங்காண் உண்மையாகக்
குரிந்துமே பாகமிது குறிப்பைப்பார்த்துக்
கூத்தாடும் யாகோபு குறித்தவாறே. (275)

வாரேது பெண்முக்கால் சொல்லக்கேளு
வண்மைதரும் அயந்தன்னை யுழைத்துப்பாரு
ஊரேது பலன்கொடுக்கும் உறுதியாகும்
உலகத்தில் நபியாக யிருக்துபாரு
கூரேது கந்திரிகள் மிகவுஞ்செய்து
குணமாகக் கொடுத்தும்ம தருமம்பண்ணிப்
பாரேது பூமிதனி லிருந்துவாழும்
பாக்கியவான் யாகோபு பரிந்தவாறே. (276)

பரிந்திட்ட வுலகத்தோர் பிழைக்கும்நீதி
பதிவாகச் சொல்லிவிட்டேன் பலனும்பார்த்து
தெறிந்திட்ட வுங்களுக்குத் நிறமைசொன்னேன்
சித்தர்நபி யாகிடவே மூற்றும்பார்த்து
அறிந்திட்டாற் பொருளுண்டு வாதம்உண்டு
அலக்கழித்தாற் பலனென்னும் அடுத்துப்பாரு
தெரிந்திட்ட ரசவாதி காண்பான்பாரு
திட்டமா யாகோபு சொன்னதாமே. (277)

சொன்னதொரு நூல்வர்மங் கண்டுபாரு
தொல்லுலகி லிச்செம்பைச் சேருசேரு
கன்னயமாய் ஒருவேலை தெரிந்துதானால்
நாட்டிலே நபிமாராய் நல்கிவாழ்வீர்
சின்னவோர் பிள்ளைக்குந் தெரியுங்கன்றாய்ச்
சித்திரமாய்ப் பேசாதீர் சித்திபெற்றுக்
கன்னல்போ லிருக்குமுத்தி சொன்னுரையா
கடிதான யாகோபு கருணைதானே. (278)

தானென்ற சித்தருட நூலுக்குள்ளே
தாட்டிகமாய் வழலியென்றும் மூப்பூவென்றும்
ஊனென்ற புளியென்றும் மறைத்துச்சொன்னர்
ஒதினர் கருக்கடைக ளதிகமுண்டும்
பானென்ற பலபேரும் காணமாட்டார்
பத்திசெய்யிம் முன்நூறிற் பகுத்துப்பார்த்தால்
நானென்ற கண்ணுடி போலேதோன்றும்
நாதாந்த யாகோபு சொன்னவாறே. (279)

சொன்னதொரு வடமொழியைப் பார்த்துத்தேறித்
தொல்லுலகில் வாதிக்குச் சொன்னமார்க்கம்
கன்னலிப்போற் கழறியதோர் செம்புதன்னைக்
காதலா யெடுத்துமே வெள்ளிதன்னில்
இன்னிலத்திற் கொடுத்தறிந்து கபிமாராகி
பிருந்துநீ வாழ்ந்திடவே சொன்னநீதி
தன்னிகரி லிலையாதே பொய்பேசாதே
சவுங்கலாய்த் திரியாதே நூலைப்பாரே. (280)

பாரென்ற கபிமார்க ளென்போர்தானும்
பதிவாக இடங்கொடுத்து வாதமார்க்கம்
காரென்று சொல்லியே கைகொடுத்துக்
கருணைவைத்திவ் வுலகதனிற் சொன்னர்பாரு
வாரென்று கடுவான வாதமார்க்கம்
வகையறியான் தகைபாரான் மாடுமேய்க்கி
ஊரென்று உண்டுடுக்கச் சொன்னமார்க்கம்
உறுதியிது சத்தியமாம் உண்மைபாரே. (281)

உண்மையாய்க் கைபாக வரிசைகண்டால்
உறுதிவரும் நோக்கத்தான் வாதஞ்சேரும்
தண்மையாய்க் கைபாக வரிசைவந்தால்
தாக்கிடவே லோகமெல்லாம் பழுக்கும்பாரு
வண்மையாய் வாதம்பொய் யென்றுசொன்னல்
வங்கிஷங்கள் பாழாகும் பெரியோர்வாக்கு
எண்மையா யெண்ணியே நினைவிற்பூண்டால்
இன்பமா யாகோபு எழுதினாரே. (282)

எழுதினார் யாகோபு கபிமார்சொல்ல
ஏழைமதி போகாதே பிருந்துபாரு
வழுதியே பரபரப்பாய்ப் பார்க்கவென்றால்
வகையாகக் கைபாக வரிசைகண்டு
உழுதநிலம் பயிரிதல் போலேபண்ணு
ஒழுங்காகச் செய்தாக்கா லுறுதியாகும்
அழுதிடவும் வேண்டாங்காண் செம்புதன்னை
அடைவாகச் செய்தாக்காற் பலனுமாமே. (283)

திருசுயக்கோளரிக்களங்கு.

பலனுக இன்னமொரு களங்குமார்க்கம்
பாகமாய்ச் சொல்லுகிறேன் பாருள்ளோர்க்குப்
பெலனுக அரைபொடியும் பலமும்பத்து
பேசரிய திருசதவும் பலமும்பத்து
கலனுக்கெவுரியது பலமும்பத்து
கனிவாகக் கல்வத்தி லிட்டுப்பின்பு
தலமாக வெலுமிச்சம் பழச்சார்தன்னில்
தாட்டிகமா யிருசாமம் அரைத்திடாயே. (284)

அரைத்துமே வில்லைக்கட்டிக் காயப்போடு
அடவாகப் பெரியபுடம் வைத்தெடுத்துத்
தரைத்துமே புதுக்குகையில் வைத்திருக்கத்
தாட்டிகமாய் வண்டிலது கூடச்சேர்த்து
புரைத்துமே உருக்கிடவே சத்துமாகும்
பொருந்துமச் சத்தெடுத்துக் கல்வத்திட்டு
வரைத்துமே கொடியோணிப் பாதிசேர்த்து
வடிவாக அரைத்துகதிர் காயவையே. (285)

காயவைத்துப் புடமூன்றிற் செந்தூரிக்கும்
கனகமென்ற செந்தூர மெடித்துநீயும்
நாயன்மார் சொற்படிக்கு வெள்ளிதன்னில்
தாட்டிடலே யெட்டிரண்டு தான்தெரிந்து
மாயலே உருக்குமுகந் தன்னைப்பாரு
மதிபழுத்த வாறதனை யென்னசொல்வேன்
சாயைபோல் வெகுசாயம் யிந்தவித்தை
சரியாண பாகமிது தண்மைபாரே. (286)

தண்மையாய்க் களங்கபதைச் செந்தூரித்துத்
தாட்டிகமா யுண்டிடவே மேனிதங்கம்
உண்மையிது சத்தியமா முத்தப்பாரு
ஒருவருடன் சொல்லாதே உண்மைசொன்னேன்
வண்மையிது பேசவில்லை மகத்தாஞ்சித்தர்
வாய்திறக்கா வசனத்தைச் சொல்லினேன்யான்
கண்மையாய்ப் பார்த்துணர்யா கோபுசொன்ன
கருத்தையா னுங்களுக்குக் கருதினேனே. (287)

கருதியே கற்றுணர்ந்த பெரியோர்பாதம்
கவலையற்றுப் பாதமதில் விழுந்துதேறு
வருதியே பழுதுமது வராமாட்டாது
வாழ்த்தியே விடைகொடுப்பார் வணக்கமுள்ளார்
உறுதியா யுலுத்தவரும் சொல்லுவார்பார்
ஓகோகோ உண்மையது உற்றுப்பாரு
பருதிகண்ட பனியதுபோ லாகும்பாரு
பரம்பொருளாம் யாகோபு பயின்றவாறே. (288

பயின்றிட்டே னின்னமொரு சூளங்குகேளு
பதிவான நபிமார்க ளாடுமாட்டு
உயின்றிட்டே னுலகதனோர் தனக்குத்தானும்
உறுதியாய்ச் சொல்லுகிறேன் உற்றுக்கேளு
வயின்றிட்ட பாகத்தை யறியாமூடர்
வடிவாகச் சாஸ்திரத்தைப் பொய்யென்பார்கள்
நயின்றிட்ட நபிமார்கள் ஆடுமேர்மை
நாதாந்த யாகோபு நவிலுஞ்சொன்னேரே. (289)

பஞ்சமுகக்களங்கு.

நவிலுஞ்சொன்னே ரஞ்சுமுகக் களங்குதானும்
நாடியே பொருளோத்தான் நாடிச்சொல்வேன்
பலமாகத் தகடடித்து வையகத்திற்
பதியபழச் சாறுங்கற் காவியிட்டுப்
பிலமாக அரைத்துமே தங்கத்தப்பிப்
பிசகாமல் ஏழுதரங் காச்சிப்போடு
அலமாகச் செம்புதனைத் தகடுதட்டி
ஆதியாம் வடந்தன்னைச் சேர்த்திடாவே. (290)

சேர்த்திடவே வெடியுப்புச் சீனம்நோய்த்
திறமாகச் சேர்த்துமே கத்தம்நீரில்
பார்த்திடனே அரைத்துநீ குழம்புபண்ணி
பதிவாகச் செம்புதனைக் கரியோடிட்டு
நார்த்துமே யேழுதரம் பழுக்கக்காச்சி
நலமாக ஏழுதரங் காச்சித்தோய்ப்பாய்
காத்துமே கரியுப்புக் குகையிலிட்டுக்
காரியமா யுருக்கியே சொல்லக்கேளே. (291)

சொல்லவே கன்னியாங் குமரிச்சாத்திற்
றோன்றவிரு பத்தியொரு தரந்தான்சாய்த்து
கல்லவே யெடுத்ததனைப் புறம்பாய்வைத்து
நாடியே யதன்பின்னே நடபுக்கேளுக்
கல்லவே நாகமது குகையிலிட்டுக்
கரமாக வுருக்கிமெள்ள் இலுப்பைநெய்யில்
தள்ளவே இருபத்தோர் தரந்தான்சாய்த்துத்
தண்மையா யாகோபு சாற்றினாரே. (292)

தண்மையா யெல்லாமுஞ் சுத்திபண்ணி
தாட்டிகமாய் ஒவ்வொன்றும் பிடைநிறுத்து
உண்மையாய் ஒன்றுக வுருக்கிக்கொண்டு
உறுதிபெறத் தகடடித்து அதன்பின்கேளு
வெண்மையாய்ச் சத்தியுடன் சூதஞ்சேர்த்து
விரைவாகக் கல்வமிட்டு யெருக்கம்பாலால்
வண்மையா யரைத்துமே கவசங்கட்ட
மகிழ்வாயா கோபுசொன்ன வரிசைதானே. (293)

வரிசையாய்க் கட்டிதிர் காயவைத்து
வடிவாகப் புடம்போடு கரியதாகும்
கரிசையாய்க் கல்வத்தி லிட்டுக்கேளு
கணக்காகக் கொடியோனைப் பாதிசேர்த்துப்
பரிசையாய்ப் பொற்றலையின் சாற்றிலாட்டிப்
பரிவாகக் கரியில்வைத்துக் காய்ந்தபின்பு
உரிசையாய்ப் புடம்போடு கருத்துதானால்
உற்றுமே பின்பொருக்கால் மருந்துசேரே. (294)

மருந்துமே சேர்த்துநீ முன்னீர்தன்னில்
மதிபெருக அரைத்துமே வில்லைகட்டி
விருந்துகதிர் காயவைத்துப் புடமூனறிடடால்
விதமான செந்தூரம் மூருக்கம்பூவாம்
வருந்துவிடும் நவலோகம் தூற்றுக்கொன்று
வடிவாக இட்டிடவே தங்கமாகும்
அருந்திந்தத் தங்கந்தா னருமைமெத்த
ஆகியாய்ச் சொன்னதிந்த அடவுதானே. (295)

அடவாகப் பனவிடைதான் மண்டலத்தில்
ஆண்மையுட னுண்டிடவே மேனிகல்தான்
நடவான கைப்போடு புளிப்புந்தள்ளு
காடியே உண்டிடவே நயக்குந்தேகம்
படபடத்துத் தியாதே பதனமாகப்
பார்த்திட்டால் சித்தியாம் பரிவுமெத்தத்
திடமாகப் பார்த்துணர்வா கோபுதானும்
தேசமெய்க்கச் சொன்னதிந்தத் தெளிவுதானே. ()

தெளிவாகப் பஞ்சமுகந் தன்னேப்பார்த்துத்
தேறிலல் வாதமது கோடாகோடி
அழிவான புத்தியினுற் பெண்ணேச்சேர்ந்து
ஆடியே திரிந்தாக்கால் லாபமென்ன
சுழிவான நரகம்வருங் கண்டுகொள்ளு
சூட்சத்தா லாய்ந்துயா கோபுசொன்னுர்
விழியாணைக் கண்டவுடன் கெர்ச்சிக்காதே
வேதாந்த முடியவரும் வாதந்தானே. (297)

வாதமென்ன கொஞ்சத்திற் கிடைக்குமோதான்
வடிவான சடமெடுத்த நேர்மையாலே
சூதமென்ன யெளிதாகக் கட்டுமோசொல்
சுருதிதனே ஆராய்ந்து தருசச்சண்ணம்
பாதமது பட்டாக்கால் கெவுனமோடும்
பழுவாதஞ் செய்தாக்காற் கட்டமாட்டா
வேதத்திற் சொன்னபடி கண்டுசொன்னேன்
வித்தகரே பார்த்துணர்ந்தால் எண்மையாமே.(298)

எண்மையாய்க் களங்குசெய்து களங்குதன்னே
எளிதாகக் கொடுத்தாக்கால் பாயமாட்டா
வண்மையாய்ச் சிதரிவிடும் உருப்படாது
வகையென்ன வாதங்கள் பொய்யென்பார்கள்
உண்மையா யிரும்புசெம்பு சுத்திசெய்து
உருப்படுத்தும் கங்கமா யென்னசொல்வேன்
தண்மையுற்ற சிற்சிலபேர் புத்தியில்லார்
தாழ்ச்சியிகச் சொல்லுவர்க ளுலகத்தோரே. (299)

உலகத்தில் வாதமொடு குளிகைபொய்யோ
உழைத்தாக்கால் ரசவாதம் சித்தியாகும்
பலகற்றுப் பலமாக நீதிநூலைப்
பகுத்தணர்ந்து பார்த்துமே வேலைசெய்து
நிலமுழுதால் பயிராகும் வித்தைபோல
நீசெய்தால் லாபம்வரும் நிசமதாகும்
சலமிட்டால் நோயேகும் பேய்கள்போகும்
தாக்கினால் மருந்துதின் தண்மையாமே. (300)

தண்மையாய்ச் சுடர்க்கொடியோன் தன்னைத்தானும்
தாக்கிடவே சித்தியாந் தன்மைமெத்த
உண்மையாய்ச் செம்பாகுஞ் செம்புதன்னை
உத்துவெடு மதிதனிலே வேதையாகும்
வண்மையா யுண்டுடுத்த லாகும்பாரு
வழிபெருகும் ரூபிமார்கள் சொன்னநீதி
கெண்மையா யொன்றுவிட்டு ஒன்றுசெய்தால்
கெட்டுவிடுஞ் சொற்பேசாற் குறையுந்தானே.(301)

குறையாமல் மக்காவின் தேசந்தன்னில்
குருரூபிமார் மெத்தவுண்டு கோபமெத்த
வறையாக வாதமுண்டு அடியேன்போனேன்
வழியறிந்து அடித்தார்கள் அடியும்பட்டேன்
நறையாக வாதங்கள் மிகவுஞ்சொன்னார்
நான்கற்று நாட்டில்முந் நூறுதானும்
துறையாகச் சொல்லிவிட்டேன் யாகோபென்பேர்
சுருக்கமெழு நூறுஞ்சோ தித்துப்பாரே. (302)

சோதித்தேன் தம்பிரான் செயலினாலே
சுருதிபெற இறசூலின் துணையைப்பற்றி
வாதித்தார் இறசூலும் வண்மையாக
வகையான முகம்மதுவை கண்டுபோற்றிக்
சாதிபல தன்மைவிட்டு ரூபிமாரைத்தள்ள
சரித்திரத்தை விளங்கியே மூக்காற்சென்று
ஓதித்தேன் மூக்காலுந் தொழுதுபோற்றி
ஓதரிய முந்நூறும் முற்றுமாமே. (303)

யாகோபுநபியா ரருளிச்செய்த களங்கு-300
முற்றிற்று.

ஓலை ஏட்டுப்பிரதிகளிலிருந்து புதிதாய் அச்சிட்ட வைத்திய சாஸ்திர விளம்பரம்.

அகஸ்தியர் அமுதகலைக் கியானம் 1200	1	0	0
ஷை மட்டம்	0	12	0
ஷை செந்தூரம் 300	0	8	0
ஷை மட்டம்	0	6	0
ஷை பரிபூரண சூஸ்திரம் 210	0	8	0
ஷை மட்டம்	0	4	0
ஷை பூரணப் 205	0	6	0
ஷை பரிபாஷை 500 மட்டம்	0	8	0
ஷை பரிபாஷை 300	0	8	0
ஷை வைத்திய ரத்தினச் சுருக்கம் 360	0	10	0
ஷை மட்டம்	0	4	0
ஷை பரிபூரணம் 400	0	6	0
ஷைகர்மகாண்டம் 300	0	6	0
ஷை குருநாடி 235	0	4	0
ஷை வைத்தியகாவியம் 1500	1	4	0
ஷைபாலவாகடம் 1200	0	14	0
ஷைபாலவாகடம் 300	0	8	0
ஷை மாந்திரீககாவியம் 1000	0	10	0
ஷை ஜாலநிகண்டு 200	0	5	0
ஷைசரக்குசுத்தி 150	0	2	0
ஷைதிருமந்திரம் 1500	1	8	0
ஷைஜாலசூஸ்திரம் 500	0	8	0
சுப்பிரமணியர் ஞானம் 500	0	12	0
ஷை ஞானம் 200	0	6	0
ஷை மட்டம்	0	4	0
உரோமர் வைத்தியம்	0	8	0
ஷை பரிபாஷை 300	0	8	0
புலஸ்தியர் வாதசூஸ்திரம் 300	0	8	0
நந்தீஸ்வரர் கருக்கடை 300	0	8	0
ஷை நிகண்டு 300	0	8	0
புலிப்பாணிவைத்தியம் 500	0	12	0
ஷை மட்டம்	0	4	0
ஷை ஜாலம் 300	0	4	0
ராமதேவர் சிவயோகம் 200	0	8	0
சட்டமுனிஞானம் 200	0	6	0
கருவூரார் வாதகாவியம் 700	0	12	0
ஷை அட்டமாசித்து 100 மந்திரசக்கரங்களும்	0	4	0
பிரம்மமுனிகருக்கடை 380	0	8	0
அகஸ்தியர் தீட்சாவிதி	0	2	0
தன்வந்திரிசிமிட்டுரத்தினச்சுருக்கம் 371	0	8	0
திருவள்ளுவர் ஞானவெட்டியான் 1500	1	0	0
ஷைஞானவெட்டிநயம்	1	12	0
ஷைஉரைநயம்பதிப்பு 2	8	0	
ஷை நவரத்தின சிந்தாமணி	1	4	0
பதினெண்சித்தர் நாடி சாஸ்திரம்	0	8	0
வைத்தியசாரசங்கிரகம்	2	8	0
ஷை மட்டம்	1	8	0
மலையகராதி	0	6	0
வைத்திய மூலிகையகராதி	1	0	0

யோக ஞான சாஸ்திரத் திரட்டு.

வைதிய வாத யோக ஞான சாஸ்திரத்திரட்டு 10 பாகம் வரை அச்சிட்டுத் தயாரிலிருக்கிறது பாகம் 1-க்கு விலை ரூபா 1 0 0

இராமதேவராயிருந்து மக்கத்திற்குப் போன பின்பு யாகோபு என்று பேர்வகித்து சொல்லிய சாஸ்திரங்கள்.

வைத்தியசிந்தாமணிஎழு நூறும், அதன் சூஸ் திரம்50சேர்ந்தது	1	4	0
லோகச்செந்தூரம்300	0	8	0
ஷி சூஸ்திரம் 150ம் ஷி சுருக்கம் 55ம் சேர்ந்தது	0	7	0
சுண்ணம் 300	0	8	0
வாதவைத்தியம் 400	0	12	0
ஷி வைத்திய களங்கு 300	0	10	0
சுண்ணகாண்டம்600	1	4	0
ஷி சூஸ்திரம் 150ம் ஷி சுருக்கம் 50ம் சேர்ந்தது	0	8	0
பஞ்சமித்திரம் 300	0	10	0
தண்டகபட்சணி110ம் இடையபாகம் 16ம் செயபாகம் 16ம் சேர்ந்தது	0	8	0

அச்சிட்டுத் தயாரிலிருக்கிற

யோகஞான சாஸ்திரங்கள்.

1-வதுபாகம் திருமூலர் சுப்பிரமணியர முத லான சித்தர்கள் ஞானக்கோவை	1	0	0
2-வதுபாகம்போகர் கா லாங்கிமுதலான சித் தர்கள்ஞானகோவை	1	0	0
3-வது பாகம் கடைப் பிள்ளைபுசுண்டர்முத லான சித்தர்கள் ஞா னக்கோர்வை	1	0	0
4-வதுபாகம்மச்சமுனி வர்முதலான சித்தர் கள்ஞானக்கோவை	1	0	0
5-வதுபாக சுந்தரானந் தர் முதலானசித்தர் கள்ஞானக்கோர்வை	1	0	0
6-வதுபாகம்இராமதே வர்முதலான சித்தர் கள்ஞானக்கோர்வை	1	0	0
7வதுபாகம்சட்டமுனி முதலானசித்தர்கள் ஞானக்கோர்வை	1	0	0
8வது பாகம் உரோம ரிஷியார்முதலானசித் தர்ஞானக்கோர்வை	1	0	0
9-வதுபாகம் கருவூரார் முதலான சித்தர்கள் ஞானக்கோர்வை	1	0	0
10வது அகஸ்தியர்சில்ல ரைஞானக்கோர்வை	1	0	0

இப்புத்தகங்களும், புராண இதிகாசங்களும் பாவலர் நாவலர்களுக்குவேண்டும் இலக்கண இலக்கிய புத்தகங் களும், நவீன நாவல்களும், நாடக புத்தகங்களும், மகமதி யர்களுக்கு உரிய புத்தகங்களும் நானுவிதமான சில்லரைப் புத்தகங்களும் எராளமாயிருப்பதால் அவரவர் விரும்பு வதை அடியிற்கண்ட விலாசதாரிடம் நேரிலும் வி. பி. மூலமாகவும் கிரயத்திற்குப் பெற்றுக்கொளலாம்.

இப்படிக்கு,

இ. ராம. குருசாமிக்கோனர்,

புத்தக ஷாப் புதுமண்டபம், மதுரை.